உ

செந்திலாண்டவன் திருவடி துணை

புருடசூக்த பாஷ்யம்

ஸ்ரீநிவாஸ தீக்ஷிதீயம்

உ
செந்திலாண்டவன் திருவடி துணை

சிவாத்வைதரத்னமாலா

இவ்வுபநிடதத்தைத் தமிழில் மொழிபெயர்த்த
திரிசிரபுரம்
திரு. **சிவாநந்தசாகாரியற்றிய**
சிறப்புப்பாயிரம்.

மலர்தலையுலகத்திலகுபல்லுயிரும்
பண்டையவினைக்கட்டுண்டுழலாமே
சுருதிகண்முழங்குந்துரியவான்பொருளை
மனமொழிகடந்தவனகனைப்புருடனை
யாயிரங்கண்ணனையற்புதமூர்த்தியைக்
காளகண்டனைக்கணுதலொருவனைத்
தானெனவறிந்துதன்னகத்தேத்தி
வானிருள்கடந்துவளமலிபாமா
நந்தந்திளைப்பச்சிந்தைகனிந்து
மங்களவல்லிமறைபுகல்கிள்ளை
பிரமஞானப்பேரருள்செல்வி
முத்திச்செல்வமுகந்தருளன்னை
ஞானங்கல்விநயந்தெமக்கருளும்
ஆனந்தக்கொடியருள்வடிவுமையாள்
மாயவன்வடிவாய்வழங்கியபுருட
சூத்தத்துறுபொருடோன்றுதொருசிலர்
கருதியவாறேகழறிவிடுத்த
சழக்குரையனைத்தும் வழக்கறவொளிப்பப்
பரசிவஞானப்பரிதியுதிப்பச்
சிவாத்துவைதச்செல்வந்துலங்கச்
சற்சனருள்ளத்தாமரைமலரப்
பாசவிருட்குப்பகையிதுவென்னப்
பாற்கடல்கடைந்து பண்டொருநெடுமால்
ஆக்கியவமுதத்தனைவரும்கொள்ளப்
புத்துரைவகுத்துப்புவிமுழுதொளிரச்
சீனிவாசீயமெனப்பெயர்சிறப்பத்
தங்தனனகரும்சந்தனத்துணியும்
முத்தணிபவளமும் முழுமணிவயிரமும்
இருகரைசொரிந்துபெருகுறுபொன்னிக்
குடந்தையமபதியிற்குவலயமதிக்கும்
கவுணியமாபுதவநனிசிறப்ப

வந்தவரித்தமாசிலாமறையோன்
கஜலபலவுணர்ந்தபுலவர்சிகாமணி
***'கைவல்யம்' அவிமுத்தஜாபாலம்**,*
***'வச்சிரசூசி'** மறைமுதற்பாடியம்*
*விரி **"த்தத்துவவிதவிசாரம்" "வைதிக***
வர்ண நிர்ணயம்" "வேதாகமப்பிர
மாணிய மாரியாசாரரகசியம்"
விக்கிரகாராதனங்குருசீட
வேறுபாடுமுதற்பலவைதிக
நூல்பலவியற்றிமால்வயப்பட்ட
நாத்திகர் வெருவப்புத் தியான்மாவும்
***சரீரமுஞ் 'சன்மாந்திர'** ங்கன்மம்*
கடவுண்மறுமையெனப்பலபுஊநந்தோன்
அறுபகைகடந்துபொறிபுலனடக்கி
எங்குஞ்சிவமாயிருந்துணர்பெரியோன்
"தியாகராஜதீட்சிதநாதன்"
பொன்னடிபுஊயும்சென்னியன்ஞானப்
பூங்கொடிமணந்தபுராரிமால்விடையோன்
ஒருவஊயன்றிப்பிறிதொருகனவினும்
பொருளெனமதியாக்கருளிரிமனத்தோன்
சங்கம்பொங்குந்தண்டுறைச்செல்வன்
பாற்காசசேதுபதிமகராஜன்
அவைக்களம்விளக்குந்தவக்கடலன்ஞன்
தஜலயெதிரில்லாப்பரமதகோளரி
'சீனிவாச'தீட்சிதேந்திரனே

உ
செந்திலாண்டவன் திருவடி துணை

சேதுராமபாதியார்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

திருமலிபுருடச்சுருதிகற்புடைய
பெண்ணணங்கொத்துக்கண்ணுதற்பரமனைத்
தன்னுயிராகத்தழுவியதன்றிப்
பின்னொருதேவைப்பேணியதின்றென
அப்பையமுனியாதத்தாசாரியர்
ஒப்பொறுமிவர்முதலுண்மைதெளிந்தோர்
கூறியவாக்கொடுமாறுபாடெய்தித்
தம்மனப்படியேசாதித்தெழுதிய
பொய்ம்மலியுரைபோய்க்கடல்புக்கொளிப்பச்
சிவாத்துவைதச்செல்வந்தழைப்பச்
சீநிவாசதீக்ஷிதநவமணி
தேனமுதென்னச்சீரியர்கொள்ளத்
தானுரைவிரித்தசீநிவாசீய
பாடியமுலகிற்பரந்துபல்லுயிரும்
வீடெளிதெய்தும்விருப்புறுசிந்தையன்
மறைபலபரவுமறுமுகக்குமரன்
பொன்னடிபுனையும்சென்னியன்மறையோன்
சரவணோற்பவாநந்ததேசிகன் பொற்
பாதபங்கயமேபற்றெனப்பெற்றவன்
அருணிறைதெய்வத்திரிசிரபுரம்வாழ்
திருசிவாநந்தசாகரனவன்பால்
தடையறவுணர்ந்தபடிமொழிபெயர்த்துப்
புருடச்சுருதிமந்திரந்தனையும்
தந்தஸனெனக்குச்செந்தமிழுதவிய
குருபரனருணீடூழிவாழியவே.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குருஸ்துதி

திருவளர்பிரமஞானநால்வேதச்சிரப்பொருண்முவிருகலைகள்
ஒருவருசாந்திதாந்தியாதியவுமுளமமர்துணையெனச்சிறப்ப
மருவியெஞ்ஞான்றுமுடிவிலாக்கருணைமழைபொழிந்திலகியபரம
குருபரன்கமலமலரடிபணிந்துங்குறைவிலாநலனுறல்குறித்தே.

விநாயகர்

மாதுவல்லபைவாணமுகபங்கயப்
போதுகண்டருள்பூத்தவிலோசனத்
தாதியன்பர்கருகியவாங்கருள்
நாதளின்பநலம்பெறநல்குமே.

குமாரகடவுள்

பழமறைச்சிரத்தினமர்மனுப்பொருளைப்படிமுழுதளித்தருணிமலை
விழியளிமுழுகியெழிலமுதருந்துமலமலனைம் முகமலர்நிரைக்குப்
பொழிகதிர்ப்பரிதிவளனுறவளித்துப்பொலிதருசுடரினைமயின்மே
லழகனையாறுமுகப்பரடிபொருளையடிமலர்பரவிவாழ்குதுமே.

பரசிவன்

அளவறுமறையர்யிரங்கணனீசனஞ்சன்றற்புருடனீசானன்
ஒளிவளர்சிவன்சத்தெனுமபதப்பொருளாயுறுபகலிரவணைந்தாங்கு
வளமலர்வதனத்துமையொருகூற்றின்வயங்கவானுடுவடிவான
இளநிலவணியுமுழுமுதற்சுடரெம்மிதயவாலயத்தொளிர்தருமே.

உமாதேவியார்

தருநிழலிறைவன்மறைமுடிவிருந்ததத்துவப்பொருள்கொளத்தெருட்டி
வாமலிபுருடசூத்தமால்வடிவாய்வழங்கியபிரமவிஞ்சையதரம்
அருணிறைஞானசத்திமால்வரைவேந்தரும்பெறற் குமரியெம்மிதயத்
திருள்கெடுத்தமலவறி வளித்தளுமிறைவிவான்சரணரணெமக்கே.

.

திருமால்

பந்தமுற்றறுக்குமாற்றல்படைத்தமாவிஞ்சைதன்ஊன
முந்தியகுரவனபாற்கொண்டவிச்சையைமுனிந்துதீர்ப்பான்
கந்தமென்மலர்மேலானுங்கருதுசற்குரவனுய
விந்திரைகேள்வனல்வாக்கெமக்களித்தருளுமன்றே.

அப்பையதீக்ஷிதேந்திரர்

மாணறுபாஞ்சராத்திரராதிவளர்பயிர்க்கஊயஊயவரால்
வாணிவைபச்மூர்நிஊல தடுமாறவந்தவிக்கலியின்மாமறையோர்
தாணுவையகிலகாரணமுதஊலச்சார்ந்துயுமாறருள்சுரந்த
சேணுலாமலகில்புகழ்மலியமலதீக்ஷிதர்தாணலந்தருமே.

பாடியகர்த்தர்
கூறிய அவையடக்கம்

உலகெலாம்பரவுநிலவுலாஞ்சடிலத்தும்பர்கோடைஞ்செயுமாஊல
நலமெலாமலித்துஊணயொடுங்கருடனல்கியசகுளமுன்னுேக்கி
*அலகிலாப்பெருமைப்பவனெனப்பொலிதியையநீயெனவருள்சுரந்து
கஊலயெலாமளித்தகுருபரன்வாக்கேசைவிடாப்பற்றெனக் காமால்
அத்திறனளித்தநாதனருளிஊைச்சிரமேற்கொண்டு
சத்தியஞானனந்தத்தனிப்பாமுத்தியார்க்குஞ்
சத்திக்குமாறுவேதச்சிரந்தடுமாறலின்ற
தத்துவப்பொருள்விரித்துச்சாத்திடத்துணிந்தேனன்றே.

---

* இப்பாடியகர்த்தர் தமதாசிரயர்பால் பரசிமோச்கருஷங்கூறும் நூலுரைகேட்பான் தொடங்கிய உலகெலாங்கடந்த உமாபதி பரமானந்தத் தாண்டவகாலமாகிய மாஊலப் பொழுதில் இரண்டு கருடன் வானிடத்தெதிர்ப்பட்டுலாவி மங்களத்தொனியாற் சகுனந்தந்தருளக்கண்டு மனங்களிகூர்ந்த போதகாசாரியார்நீ தேவனென்ஊன வுலகத் தில் விளங்குகவென்றுசீர்வதித்தனர். அவ்வாசீர்வசனம் பலித்தமையால் அதஊனயே வியந்து குறிப்பித்தனர். பவதேவர் சைவபாடிய கர்த்தர்களுளொ ருவரென்றுணுர்க.

உ
செந்திலாண்டவன் திருவடி துணை
திருவடி துணை

புருடசூக்தம்.

முகவுரை.

சீர் பெருகு மிவ்வுலகத்தின்கண் கலிகாலக் கொடுமை மிகுதிபற்றித்திருவருட் செல்வங் குறைவுறத், தாந்திரீக விருகாற்பசுக்கள் பலதோன்றி, அபௌருஷேயமும். பரமபுருஷார்த்தம் பயக்கும் கற்பகமுமான நமது வேதப்பெருநிதியை ஒருவாறெது க்கி யொழித்து அவமதித்துவருவது அறிஞர்க்கறிவுறுத்தவேண்டியதன்றே; இங்ஙனமிருக்க, இளம்பிறை சூடிய இறைவன் இணையிலாப்பெருமை ஒரேவழி ஒளிந்திடநேர்ந்திடலால் அந்தோ! எவ்வுயிர்க்கும் திருவுள்ளக்கமலத்தில், சுருதி முடிகள் கொண்டாடும் நிகரில் பெருமைதாங்கியதூஉம், தோன்றுவன வெல்லாவற் றிக்குக் தோன்றுமிடம யதூஉம் **சத்து பிரமம், பிரணவம், ஓங்காரம், மகாதேவன், புருஷன், சகஸ்ராட்சன் சிவன், பவ**னுகியான பல நாமங்களால் ஆன்றோர்க்குத் தன்னருமையை யறிவிக்கு மாற்றலுடையதூஉம், **கருக்குழி நாற்றங்கமழப் பெருத** முழுமுதற் பொருளும், **ஆண்மை நீங்காவாதி** தேவனும், புருடர்க ளெல்லாரும் போற்றும் புண்ணியப்பொருளும், சர்வ புருஷார்த்ததான சுதந்திரமும், **தந்திரப் பயிற்சி மிகுந்தபாமரர்** அறியாப்பரம் பொருளும், **திருமால் திருவாய் மலர்ந்தரு ளிய** மான்மியப்பேறு பெற்றதூஉம், வேதாந்தங்களில் இடைவிடாது நிஷ்டைகூடிய நின்மலருள்ளத்துத் தூண்டாமணி விளக்கா யமைந்ததூஉம், எச்சமையத்தும் மற்ற எப்பொருளையுமுணர்த்தாத வாற்றலமைந்த **திரிலோசனன், உமாசகாயன், உமா பதி, விரூபாட்சன்** என்றற் றெடக்கத்தனவான திவ்யநாம தேயவைரவாணி யறைந்த நற்காரண வாக்கிய உட்பொருளானதூஉம், பரமேசுவர பட்டம் பெற்றதூஉம், உலகெலா மீன்றருளும் உமையென்னும் பிரமவித்தையின் திருவுள்ளங்கவருமேக நாயகனுமாகிய அம்முழுமுதற் பொருள் எங்கோவெனத்தேடநேர்ந்தது அஞ்ஞான்று **ஸ்ரீபகவத்சங்கரமுனி ராஜன், ஸ்ரீஸ்ரீகண்டயோகி, ஸ்ரீபவதேவபண்டிதர், ஸ்ரீ சுதர்சனுசாரியர், ஸ்ரீமதப்பய தீக்ஷித சுவாமிகளாதி** பரமாசாரியர்களால் கிணற்றிலும், காட்டிலும், கடலிலும் கடைந்து தேடியெடுத்தாற்போலப்புறமதவாத விடையூறு நீக்கி வெகு பரிசிரமத்துடன் விளக்கப்பெற்றும் அதை அறிந்துய்பவர் அற்றிடக்கால நேர்ந்ததே யென ஆறுத்துயரமுற்று, இஞ்ஞான்று தோன்றுந் திருவருட்பிரகாச வள்ளலார்களாகிய சிவஞானச் செல்வர்கள் சிறிது திருநோக்குத் தீட்சை செய்து எமக்கிட்ட ஆணையை மேற்கொண்டு ஆசிரியன் கருணையென்னு மழியாக்கவசம் பூண்டு **பரமசிவன் சிவபரிவாரம், சிவபூசை சிவசின்ன**மிவற்றின் பெருமையைப் புக்கட்டும் புண்ணியோபநிடதங்ககள் பதினெட்டையும் புருடசூக்கத் தோடு சேர்த்து, அதில் விரிவின்றி யோர் பொழிப்புரையால் அலங்கரிப்போமாக.

அவற்றுள் ஆதியில் எல்லாக்கடவுளரும் தனமாகவிருக்கப் பெற்ற கண்ணு தற் பெருமான் பெருமையை விளக்குக் புருடசூக்த உபநிடதத்தை * யஜுர்வேத வழிபற்றி உரை விரிப்பாம்.

* யஜர்வேதவழிபற்றி யென்றது: - இப்புருடசூக்தம் இருக்கு, யஜுஸு, சாமமென்னு மூன்று வேதங்களிலும் படிதமாயுள்ளது. யஜுர்வேதத்தில் இருபத்துநாலுமந்திரமாய் இரண்டு அநுவாகப்பருப்புடன் விளங்குகின்றது. ஏனைய பதினாறு மந்திரமே கொண் டன. முன்னோர் யஜுராரணியத்திற்கூறிய புருடசூத்தத்துக்கேபாடியம் வகுத்தனராத லானும், யஜுஸில் புருடசூக்தத்தைத்தொடர்ந்துவரும் அடுத்த பகுதி கள் முற்றும் சினபாரம்யங்கூறிவருவதலானும் அதுசிவபரமெனச்சாதிக்கதிற்குப் போந்த ஆதார மாய் நிற்றலானும் என்க, இதனைத் தொடர்ந்தே தைத்தரியம் மகோபுநிடத முதலிய வுபநீடதங்கள் அமைந்துள்ளன,

---

இப்புருடசூக்தம் இருக்குவேதத்தில் பதினாறு இருக்குகளாகப் படிக்கப்பட்டி ருப்பினும், தொல்லாசிரியர் விசாரித்தருளிய வழியே இதனடுத்த அநுவாகத்தையும் கலந்து உரையிட முயன்றும். இப்புருடசூக்தமே உபநிடதங்களில் சேர்ந்ததென்றறிக.

அற்றேல் "**போதாயனர்** முதலிய முனிவர்கள் பலர், இப்புருஷசூக்தத்தைப் பலவித விரதங்களில் பல தேவதைகளைப் பூசிக்க்குமிடம், உபயோகித்தார்களாத லால் இதன் பொருளி்தெனத் துணியப்படாது பலவிதமாக நிற்றலே வேண்டும். அங்ஙனம் சிவபூசை முதலிய சிவ 'வழிபாட்டிலும் இம்மந்திரங்களை யான்றோர் விதித்திருத்தலால் அதற்கேற்பச் சிவபரத்கமுதற்கோர் பொருளாமாயினும் அதுவினி யோகத்திற் கேற்பமேதாவிகள் கற்பனையாமேயன்றி அதனுண்மைப்பொருளாகாது. உப பிரம்மண முதலிய பலகாரணங்களாலச்சூக்தந்துக்க மைந்த பொருள் இ்தென முற்கலோபநிடதம் துணிந்தோதியது ஆங்குக்கண்டுணர்க. வேதங்களெல்லாவற்றிற் கும் ஒரே உரையாசிரியராய் விளங்கிய ஸ்ரீமத்சாயனமாதவாசாரியாரும் அவ்வழியே நடந்தாராகலான் நுமது முயற்சி பயனற்றதே யெனிற் கூறுதும்.

இப் புருடசூக்தத்திற்கு விநியோகத்திற்கேற்பப்பற்பல உரைகளுண்டென்பது உண்மையாயினும் 'வீடுகூட வழி வேறிலையே' யென்றுஓர் சொற்றொரிடங் வுபநிட த்தின்கண் அமைந்திருத்தலால் இதைப்பல கடவுளரைக்குறிக்கும் பதவுரை யாக்க லாகாது. ஒவ்வொருகடவுளரைக் குறிக்குமிடம் அவர்வழிபாடன்றிமற்றது வீடுகூட ஏதுவாகாதெனக்கூறிடின் இவ்வுபநிடதம் உன்மத்தர் கூற்றெனவுயர்ந்தோ ரொதுக் கிடநேரிடும் விவாதி!! '**ஸோம்லதைவிண்டுவைப்பெற்றதென**' வாரணங்றியதூஉம் புராணங்கள் அதைப்பின்பற்றியதூஉம் நீயறியாமையென் கொலே!! அங்ஙனம் '**மாகேந்திரஸ்தோத்திரத்தின்**' பெயராயபிரஷ்ட வென்னும் சொல், ஓரிடம் 'தந்த மென்னும் சாமத்திற்குப் பெயராய்வேதமே விரித்ததும், 'பசு' வென்னும் சொல் 'ஆவினத்தையும், அஸ்வத்தையுமேகுறிக்கு' மெனப்புகன்றதூஉம் நீயறிந்திலையோ? மேற்கண்டவாக்கியங்களைக்கொண்டு **ஸோமலதை** நாரணனுக்கு அப்பனெனவும் '**பிரஷ்ட**' மென்னும்சொல் 'ரதந்தாத்தையே' கூறுமெனவும், '**பசு**' வென்னும் சொல் பரியையும், ஆவினத்தையுமே கூறுமெனவும் நீவிர் ஒப்புவீரோ? "சந்தோ" வென்னு மந்திரத்தக்குச் சந்பொரு ளெனவும் "உத்புத்யஸ்வ" என்ற மந்திரததுக்குப் புதன் பொருளென்றும், அவரவர் பூஜையில் வினியோகிக்கப்படுதல் ஒன்றைக்கொண்டே

அப்பதங்கட்கு அதுவே பொருளென நும்மாலதல், நுமதாசிரியராலாதல் நாட்டுதல் கூடுமோ,

நிற்க, சுருதி, லிங்கம் முதலிய அறுவகை ஏதுக்களால் உண்மைப்பொருளை யறியவேண்டு மெனக் கூறுதல் எவ்வான்றேரானு மறுக்கப்படாவுண்மை.ஜனி எவ்வாரணப்பகுதி எப்பொருளின்கண் சுருதி முதலிய அறுவகைப் பொருளறி குறிகளை நிலைபெறுவித்துள்ளது அப்பொருளே அம்மந்திரத்துக்கு உண்மைப் பொருளென்பது மந்திரவியலந்றிதமாமுனிவோர் துணிபு. அவ்வழிநின்று **'இப்புருஷசூக்தம்'** கறைமிடற்றண்ணலேயே **'காணுப்பொரு** ளெனக்கண்டோதிய தென ஸ்ரீமத் அப்பய்யதீட்சிதராதி மூதறிஞர் அவர் தாங்களியற்றிய நன்னூல்களில் விளக்கியருளினார். யாமும் அதிலும் விரிவாய் ஒன்றிரண்டு மந்திரங்களுக்குப் பொருள் கூறமிடத்து விளக்கிக்காட்டுவாம்,

பண்டிதர் வேதங்களைப் பொருட்படுத்த முயன்ற விடம் அவ்வேதமே மற்றேரிடத்து எப்பதத்திற்கு எப்பொருள் கூறியதோ அதே பொருளெனயாண்டுங் கொள்ளவேண்டு மென்பது அரசனிட்ட ஆணையாகாது. அது வேறு அளவைகளுடன் முரணுவழியே பயன்படு மென்பது பொதுவிதி. அங்ஙணமில்வழி 'பசுவை வெட்டல் வேண்டும்' என்பதாதி விதிகளால் பற்பல விபரீதப்பொருள் தோன்ற (1) தீவினைகளெ வ்வளவோ விளையும்.

---

(1) தீவினைகளாவன: - பசுவெனும் சொல்லுக்கு, **பரீ** அல்லது ஆவேபொரு ளெனக் குறிப்பிடுதலால் அச்சொல்லுக்கு ஆவையும் பரியையுமன்றி வேறுபொருள் கூறலாகாவென்னும் பக்கத்துப்பசு வேட்குமிடத்து அஜத்துக்குப்பதிலாகக் கோஹத்தி புரிய நேருவது போலென்க.

ஆகவே அவ்வப்பிரகரனங்களுக்கே அவை ஏற்றனவெனவிட்டொழிக. இவ்வழியை நும்மவருங் கடைப்பிடித்தார். எவ்விடமெனில் - (2) துரோண கலசத்தைப் பிரதிஷ்டை செய்து அதனிடம் சோமரசத்தைத் தெள்ள வினியோகிக்கப் பட்டும், அதற்கேற்ப பாஷ்யக்காரர்களாலுரையிடப்பட்டு முள்ள 'அதப்ததநு' என்று தொடங்கிய மந்திரத்துக்குப் பிரகரணவிருத்தமும் வேதநிந்திதமுமான சூட்டுக் கோற் பொருளை நாட்டுமிடத்தாமென. நும்மவர் நூலுண்மையைக்கண்டடங்குக.

---

(2) துரோணகலச மென்பது: - சோமரசம் சேர்த்து வைக்கும் ஓர் யக்ஞ பாத்திரம். அதுதோணிபோன்று இருத்தலாலும் **'துரோணம்**, எனும் ஓர் அளவமைந் திருத்தலாலும் **துரோணகலச'** மெனப் பெயராயது. ஆலந்தருவிற் செய்யப்படுவது.

ஆதலால் சுருதிமுதலிய (3) அறுவகை அறிகுறிகளைக்கொண்டு இச் சூக்தத்திற்குப்புருடனேபொருளெனவுரையிடுதல் எவ்வழியானும் குற்றப்படாதென்று தெளிக

(3) அறுவகை குறிகளாவன:- சுருதி, லிங்கம், வாக்கியம், பிரகரணம், ஸ்தானம், ஸமாக்கியை, என்டன. சுருதி, லிங்கம் இவைகளிந் நூலிறுதியிற் காட்டப் பட்டன. வாக்கியம் = 'புருடனன்றே ருத்திரனென்பதாதிகள் உயர்காயத்திரிப்பொரு ளாகிய உமாபதியின் பெருமைவிளக்கும் சூரியமண்டலவித்தையே பிரகரணம். சூரிய மணடலத்தைக்காட்டி மண்டலாதிபதியை விளக்குமிடம் ஸ்தானம் புருடஊக் குறிக்கும் பகுதியெனப் பொருள்படும் புருடசூக்தமென்னும் பெயர் சமாக்கியை.

உபக்கிரமம் (ஆரம்பம்) ஆபிரம்சென்னியன் உ: ஸங்காரம் (ஈ-று) இரவும் பகலுமிருபாலாகும், தாராகணங்களவனுருவாகும் என்பன. அப்பியாசம் (ஒரே பொரு ஊக்குறிக்கும்பலசொற்கள்) 'அமிர்தத்தன்மையதீசரனன்னே சென்னியினின்றுகாய முண்டாயது, பிரமன்முன்னரெவிஊனக்கூறினன்' அந்தப்புருடஊ மகாஊயாதித்த வண்ணனை, என்பதாதி, அபூர்வதை (வேறளவைகளாலறிந் தறியப்படாமை) புருடசூக்தத்திற் சொன்ன விராட்டுபஸ்தி வேறெங்கும் விரிக்கப் படாமையானென்க. பலம் = (பிரயோஜனம்) 'வீடுகூடவழிவேறிலையே' என்றதனுல் வீடு பயன், அர்த்த வாதம் = விராட்சிருஷ்டி, தேவமானசயாகம் முதலியன.

காரணப்பொருஊ யறிந்தவன் காரியப்பொருள்கஊ உணர்வா னென்பது திருஷ்டாந்தமாக இச்சூக்தத்தின் உண்மைப் பொருளாய உமாபதி உலகமேலாமாய பொருளாகவே அவஊக்குறிக்கு மிச்சூக்தம் எக்கடவுளங்வழிபாட்டினும் உபயொகிக் கப்படுவது உசிதமேயெனக்கொண்டு எவ்வழியும் முரணுதலில்லாத விந்த நல்வழி கைப்பற்றி நன்மை கடைபிடித்தொழுக. இனி விரிக்கிற் பெருகும்.

முகவுரை முற்றும்

உபபத்தி = (ஏதுக்கள்) "புருடனே சென்றது வருவதெவை யவையெல்லாம்" என்பதாதி இப்பதின்மூன்று கருவிகள் கொண்டன்றி வேதப் பொருள்கள் கணடறிதல் கூடாதென்பது நூற்றிணிபும் ஆன்றேர் கொள்கையுமாம். ஆகையாலிப் புருடசூக்தத் துக்குச் சிவபரஞ்சுடரே பொருளென நாட்டுதற்கு அப்பதின்முன்று கருவிகஊயும் பிரயோகித்தவாறுகாண்க, இதன் விரிவு யஜுர் வேதாரணியகத்துக்கு இப்பாடிய கர்த்தரியற்றியமாபாடியத்துட்காண்க.

உ

சூக்தஉரை

இச்சூக்தத்துக்கு, 'நாராயணனென்பவன் ருஷி, இறுதியிலுள்ள மந்திரம் திருஷ் டுப்பு சந்தஸ்' மற்றவைக்கு அநுஷ்டுப்புச்சந்தஸ், அவ்வியக்தம், மஹத்து முதலிய தத்துவங்களுக்கு வேறுயும் சேதனனுயும் புருஷனிலும் வேறில்லை, என்பதாதி சுருதி களிற் பிரசித்தனுயுமுள்ள புருடன் தேவதை; இதற்கேயாஸ்க முனிவரும் "முதற் பதினுறு, நாராயணன் ருஷி, புருஷன் தேவதை, அநுஷ்டுப்ச் சந்தம். இறுதியில் திருஷ்டுப்பு விநியோகம் முற்கூறினும்' என்றுநிருத்தம் செய்தருளினர்' என சாயண மாதவர்சாரியர் இப்புருஷசூக்த உரைக்கு முகவுரை கூறினர்.

ஈண்டு நாரயணரென்பவர் 'ருஷி' என்றதனுலும், யஜூர் வேத ஆரணியக பாஷ்யத்தில் "நாராயணனெனப்படும் ஓர் இருஷி இதைக்கண்டமையால் இதற்கு நாராயணமென்று பெயர்" என்றதனுலும் ஆசிரியர் மாதவர் கருதியது. "உம்மை விரிக்கும் இம்மகோபநிடதத்தை நாராயணன் கண்டானுதலின தனைநாராயண மென்பர், அந்தகாரீ புருடசூக்தம் போல" என்று ஆசிரியர் ஹரத்தமூர்த்திகள் அன்றருளிய பொருளைத் தழுவி 'வாமதேவியம்' சாமம் என்பனவாதியிடங்களில் அவ்வம்மந்திரத் தொகுதிகளை அவ்வவ்விருடிகளின் பெயராலழைப்பதுபோல் இதற்கும் 'நாராயணமென்றுபெயரயைந்ததே யன்றி, நாராயணனை உட்பொருளாய்க் கொண்டமைந்த தல்லவென்பது மற்றோரிடத்தில் விரிப்பாம்,

முதலாவது மந்திரம்.

(1) **திருவளராயிரஞ் சென்னியன் புருடன்.**
ஆயிரங்கண்ணனுயிரம்பாதன்
அவனேயுலகை
விச்சுவத்து வியாபித்ததன்மேல்
ஈரைந்தங்குல மிருந்தனனென்ப.

இதின் முற்பாதியில் பிரதிபாத்தியத்தின் துணிவுகூறப்படுவது. அதில் புருட னென்னும் சொல் 'எக்கடவுளரையுங் குறிக்கும் விசேடச் சொல்லாகாது; அச்சொற் குச் சேதனனே பொருளாதலின் அப்பொருளைக் கொண்டே' அவ்வப்பிரசுரணங்களிற் புருடசப்தம் சேதனசாமானிய முகத்தால் விசேஷத்தையும் உணர்த்துதல் கூடுமாத லின் அப்புருடச் சொற்கு அமைந்த பொதுவாற்றல் அன்றி அவ்வப்பிரகரணங்களுக் கேற்ப ஒவ்வோர் கடவுளரிடம் விசேட ஆற்றல்கற்பித்தல் (1) நந்நியாயத்திற்கு விரோ தமென்றும்,

(1) இந்நியாயத்தின் வரலாறு (பர்ஹி:-ஆஜ்யம்) இவ்விரு சொற்களும் ஆரியர் வழக்கில் ஸம்ஸ்காரம் செய்யப்பெற்ற தருப்பை முதலிய புல்வகையையும் ஸம்ஸ் காரம் செய்யப்பெற்ற நெய்யையுமே குறிக்கின்றது. இச்சொற்களை முறையே

'புற்சாதி' மாத்திரையிலும் நெய்மாத்திரையிலும் ஆரியரன்றி மற்றார் உபயோகிக்கின்ருர்கள். இவ்வணமாயிருக்க இதன்பொருள் 'சாதி' மாத்திரமா அல்லது 'ஸம்ஸ்கார, முஞ்சேர்ந்ததாவென்று ஐயந்தோன்ற இவ்வதிகரணத்தில் 'சாதி, மட்டே, அதன் பொருள் என்றும் அப்பொதுவாற்றலைக்கொண்டே ஆரியவழக்கும் பொருந்து மாகவே 'ஸம்ஸ்காரம்,' 'அடைசேர்த்து ஆற்றலைக் குறைத்திடுதல் கூடாது, என்பது சித்தாந்தம் செய்யப்பட்டது.

'அதனல் புருடசூக்தத்துத்துக்கு நாராயணன் விசேடப் பொருளாகானென்றும் ஸ்ரீகண்ட வித்தியாசாரியசாகிய ஸ்ரீமத் அப்பைய தீட்சிதஸ்வாமிகள் அருளிச் செய்தனர். ஆயினும் சிவன் கிருஷ்ணன் முதலிய சொற்கள் 'பரமமங்களன்' 'கரியனென்னும்' பொருளைக்கொண்டு முடிவனவாக (1) க்கோசங்களில் காணப்படுகின்றன. ஆயினும் விசேடமாய்ப் பரசிவனும், திருமாலும் பொருளென அதேகோசங்கள் வேறிடத்தில் எடுத்தோதுவதால் மேற்கண்ட நியாயத்தை விசேடப்பொருளைக்குறிக்கும் கோசாதிகளில்லாவிடமே உபயோகிக்கவேண்டும். அங்ஙனமில்வழி, (2) கிருஷ்ணன் தேவதை, 'சிவன் தேவதை, என்பதாதி ஆன்ருேர் வழக்கவலமாம்.

அற்றேல் 'அவனிவன் புருடனைப்போன்றவன்' 'பதினறுகலைகள் புருடனிடமுள்ளன' என்பதாதிவேதவாக்கியங்களில் புருடனென்னும் சொல் சரீரத்திலும் ஆன்மாவினிடத்திலும் விநியோகிக்கப்படுதலால் அவ்விரண்டு மதன பொருளாகலாம்; நாராயணனிடத்து விசேடசக்தியைக்குறிக்கும் பிரமாணமேதுமில்லை. 'புருடனன்றே நாராயணன் சங்கற்பித்தானென்னுமிடத்துப் புருடசப்தம் நாராயணனுக்கு அடையாக விநியோகிக்கப்படினும், அங்கு நாராயணனென்பதே விசேடியமாய் நின்று, புருடனென்னும் சொல்லுக்கு நாராயணனைப்பொருளாகவொட்டாது தடுக்கின்றது. அங்ஙனமின்றி அப்புருடச்சொல்லுக்கு நாராயணனே பொருளாயின் இரண்டுமொரு பொருளைக்குறிக்கும் சொற்களாய் 'கலயங்குடம் என்பதாதி சொற்றொடர்களைப்போல உத்தேசியம், விதேயமொன்றுபட்டு வாக்கியமே பொருளற்றதாய் முடியும் அங்கு சாமான்யவாற்றலைக்கொண்டு சேதனப்பொருளெனக்கொள்ளினும் குற்றமேதுமில்லை. ஆதலால் இவ்விடம் புருடனென்னும் சொல் சாமானியச் சொல்லேயன்றி விசேடச் சொல்லாகாது' எனில் அற்றன்று.

(1) கோசங்கள் = நிகண்டுகள்.

(2) 'கிருஷ்ணன், என்னுஞ்சொல்கரியநிறத்தைப்பெற்ற பொருளையும் சிவன் என்னும் சொல்லும் 'பரமமங்களனையுங் குறிக்குமாகவே அவைதேவதை என்னும் (வடநூல் வழக்கின்படி) பெண்பாற் சொற்குவிசேடணமாக்குங்கால் அதும் அப்பால் பெறநேரும் என்பது கருத்து,

வேதங்களிலாவது மற்றெப்பிரமாணங்களிலாவது ஸ்ரீமத்ஆசாரியர்கள் கண்ட வழிப் பொதுவழக்கால் சித்திக்கு மாற்றலையொழித்துவிசேடமாய் விண்டுவைப் பொருளாக்கப் பிரமாணமேதுங் கிடையாவிடினும், ஜைமினிமுனிவர் (1) 'யவராகாதிகரணத்தில்' நிச்சயித்தவாறு வேதங்களைப் பொருள்படுத்துமிடம் வேறுவிரோதமில்வழி ஆரியர் வழக்கு முக்கியமாய்ப் பிரமாணமாதலின் ஈண்டு பரசிவன், திருமால்

இரண்டு பொருள்களிலும் புராஞுதிகளில் விநியோகிக்கப்பட்டவிப் புருடனென்னும் சொல்லுக்கு வேதவழக்கு மிகுதிபற்றி வைதிக வாக்கியப் பொருஊத் துணிவதே யுசித்மாதலாலென்க.

(1) யவவராகாதிகரணம் = இதில் யவம் இராகம் முதலிய சொற்கஊப்பற்றி விசாரிக்கப்படுகின்றது. ஆரியர் யவம் என்னும் சொல்ஊ ஓர் வகைத்தானியத்திலும் வராகம் என்னும் சொல்ஊ பன்றியிலும் உபயோகிக்கிறுர்கள். ஆரியரன்றி மற்றவர் மேற்கண்ட தானியத்திலும் மிருகத்திலும், வேறுன மற்றெருவகை தானியத்திலும் மிருகத்திலும் உபயோகிக்கிறுர்கள்' ஆகவே இவற்றின் பொருள் யாதென சம்சயம் = பஇஹிராஜ்யாதிகரணத்தில் ஆரியர் வழக்கை மறுத்து மிலேச்சர் வழக்கே சித்தாந்த மாயமையின் இங்கும் அங்ஙனமே ஆதல்வேண்டும் என்பது பூர்வபட்சம். வேதவழக் கின்முறை அறிந்தோர் ஆரியராகவே அவர்வழக்கே உண்மையென்றும், பொதுவும் சிறப்புமாய் அநாரிய வாரிய வழக்குகள் அமைந்தவிடத்தே முற்கண்ட ஞாயத்தை யெடுத்து ஓதப்பட்டமையால் அதுபொதுசிறப்புப் பொருள் அமைந்த சொல்லின் கண்ணே அமையுமெனறும் பொருள் வேற்றுமையுள்ள மேற்கண்ட சொற்களின் கண்முற்கூறிய பர்ஹினஞாயம் அமையாதென்றும் சித்தாந்தம் நாட்டப்பட்டது.

ஆதலாற்றுன் சிவாத்வைத பரமாசாரியஸ்வாமிகள் சிவதத்துவ விவேகத்தில் புருடசப்பத்திற்கு விசேட சக்திஸ்வீகார பட்சத்தையுமொப்பி "புருடனென்பவன் சம்பூரணன் சிவன் சத்தியமுதலிய இலக்கணம் பெற்றவன், சாம்பமூர்த்திதரன்; மற்றருத்திரன், அயன், திருமாலங்ஙனமாதார்.' என்பதாதி வசனங்கஊக்காட்டி அச்சொல் சிவபரமுமாகலா மென்று நாட்டியருளினர்.

ஈண்டுச்சிலர் "புருடனென்பவன், என்று தொடங்கிய வாக்கியம் பிரமன், விண்டு, ருத்திரன் மூவரையுமொழித்துச் சிவனிடத்தில் (2) சாம்பமூர்த்திதரத்துவத் தை விதிக்கின்றதே யன்றிப் புருடத்துவத்தை விதிக்கவில்ஊ. உலகத்தில் சிவஊயே அர்த்த நாரீகனென்று வழங்குதலால் என்று ஆக்ஷேபிக்கின்றனர். அஃது ஆராய்ச்சி முன்னில்லாது. புருடனென்பவன் பூரணனென்று குறித்தலால் புருடசூக்தத் திற் குறிப்பிடப்படும் சர்வபரிபூரணதவம் பிர்மலட்சணமென அதை அநுவதித்துப் பரமசிவனிடத்துச் சேர்ப்பது இவ்வசனத்திற்கு இன்றியமையாக் கருத்தெனப் புலப்படு தலாலும் அங்ஙனமே வேதத்தில் 'புருடனன்றேருத்திரன், என்று (3) ஏவகாரப் பொருஊக்குமிக்கும் 'அன்றே, வெனும் சொல்லால் ஈண்டு விலக்கப்பட்ட பிர்ம, விண்டு, ருத்திரர்கஊ விலக்கியதாலும் என்க. மேலும் 'ஈசன் விருட்சத்தைப்போல சையாது ஆகாசத்திலிருப்பான், ஏகனுயவப் புருடனுல் இவையெல்லாம் பரிபூர்ணம். என்று முற்செய்யுளில் உலகம் புருடனுல் வியாபிக்கப்பட்டதெனக்குறித்து 'விருட்சம் போல் ஸ்தம்பித்து ஆகாயத்துள்ளா னெருவன், அவனுலிது வியாபிக்கப்பட்டது புருடனுல் சர்வமும், என்னுஞ்சுருதிவாக்கியத்தை விவரணம் செய்த விபபிரகரணத் தில் புருடனெனபது எச்சேதனனென விசேடஅவாநிஊ தொஊயாதுபற்றி அவ்வவா நிஊயை நிக்கவெழுந்த விவ்வசனம் அப்புருடச்சொற் பொருஊத் துணிந்தோதலால ன்றி வேறு எவ்வழியும் பயன் பெறுமாறில்ஊ.

(2) சாம்பமூர்த்திதரத்துவத்தை = அர்த்தநாரிபாகனுய் நிற்றலை
(3) ஏவகாரப்பொருளை = தேற்றப்பொருளை

மேலும் ஈண்டு அர்த்தநாரிசத்வத்தை அதுவே விதிக்குமாயின், அவ்விதத்திரு வுருவம் சங்காரருத்திரனுக்கு முளதாதலின் அவனை அதினின்றும் விலக்கியோதிய சென்னையோ? அம்மட்டோ! பாஞ்சராத்திரம் முதலிய தந்திரங்களில் நாராயணனுக் கும் அர்த்தநாரிசத்வம் சொல்லப்படுதலின் அத்தந்திரத்தைப் பிரமாணமெனக்கொ ண்ட உமக்கு அந்நாராயணனிடம் அர்த்தநாரீசத்தன்மையை விலக்குதல் கூடுமோ? அங்ஙனமே 'பாதியாற்புருடனுய், என்ற மநுவாக்கியத்தால் பிரமனுக்கும் அர்த்தந ரீசத்வம் கூறப்படுதலால் அதுபிரமன், விண்டு, ருத்திரன் மூவர்க்குமிருக்க இவ்வசன த்தில் இம்மூவரையும் விலக்கித்துரியசிவனுக்கே விதிக்கப்பட்டனென விவாதிக்க நேர்ந்தற்குக்காரணம் அவர் தம் சித்தாந்தவாராய்ச்சிக் குறைவு மாத்திரமேயல்ல; அகாரணத்தில் உதித்து ஆழ்ந்தசிவதுவேஷமகா ரதகத் தீப்பயனுமேயாம். இஃதோர் புறங்கிடக்க;.

இனி வேதவழக்குமிகுதிபற்றிப்புருடசப்தப் பொருளாராயப்புகின், அவ்வேதங் களிலெவ்விடத்து 'சத்து, தத்து, பரம், பிரமம, என்பனவாதிசப்தங்களால் குறிக்கப்பட்ட முக்கட்பிரானிடம் பலவிடங்களிற், புருட சப்தம் விதிக்கப்படுதலானும், மற்றைய தேவதைகளின் பெயராயுபயோகப்படாமையாலும் அப்புருட சப்பத்திற்கு வேதவழக்கு மிகுதி பற்றிப்பொருளாய் அமைந்தது. அம்பிகை பாகனே யென்க. வேதங்களில் விசேஷமாய் புருடசப்தம் சிவரமாகக்காணப்படுதல் எவ்விடத்தென்னில், அவைக ளிற் சில காட்டுவாம் (1) 'அப்புருடனையறிவாம்' என்பதொன்று; இதிற் புருடனெ ன்னும் சொல்லிருத்தல்போல், கணபதி காயத்திரி முதலியவற்றிலுமிருத்தலால் இதனுற்பயன் யாதெனின், கூறுதும். விஷ்ணு, நரசிம்மன் முதலிய காயத்திரிகளிலிச் சொற்காணப் படாமையானும் பரமசிவன், அவர் பரிவாரமாகிய 'கணேசன், ஸ்கந்தர், நந்தி, கருடன்' முதலிய காயத்திரிகளிற்றுனே யிப்புருடசப்தமிருத்தலாலிது சிவபிரானுக்கே ஏற்றதெனத்துலரியப்படுமென்க. அற்றேல் கருடனும் சைவனேவெ னில் முக்கண் முதலிய சிவசின்னம்பெற்றவனெனமைந்தரகற்பங்கள் கூறி நிற்றலால் அவனைச்சைவனெனச்சொல்லலாம். ஆகலாற்றுன் கருடசயனத்தில் இட்டிகைரூ பனுன கருடனை ஸ்தோத்தரித்து அவன் சரீரத்தில் அமைக்கப்பட்ட மகாக்னியின் கண்பரசிவப்ரீதிகரப் பூரணுகுதி செய்யப்படுகிறது. இரண்யகர்ப்பர் முதலியோரிடம் உற்பத்தி நாசாதி சரீரிசினனந்தோன்றுதலால் அநாதிமல முக்தராய சுப்பிரமணியர், கணேசர், சிவப்பிரசாதத்தாற் சத்தினிபாதமெய்திய 'நந்தி' முதலியமுக்தர் இவர்களி லும் வேற்றுமை நன்கு விளங்குதலாலென்க. அங்ஙமைாகப்புருடனென்பது சிவன் பெயராயமைந்தது.

(1) அப்புருடனையறிவாமென்பது ருத்திரகாரியத்தின் முதலடி

மேல் 'புருடனன்றே ருத்திரன் சத்துமகான் அவனை' வணங்குவாம் 'ஸஹஸ்ராக்ஷனுகிய புருடனை அறிவாம். மகாதேவனை த்தியானிப்பாம், என்பனவாதிபல வசனங்களுள. மகான், பிரபு, புருடன் சத்துவத்தை நடத்துவோன்

என்பனவாதி வைதிகப்பிரயோகங்களை உற்று நோக்கின் உண்மை புலப்படும். அற்றேல் 'புருடனள்றே நாறுயணன் விரும்பினுன், என்றவிடத்து வேதம்புருட னென்னும் சொல்லை நாராயணனிடத்தும் உபயோகித்தமையால் இப்புருடசப்தம் நாராயணனைக்குறிப்பதில் தடையாது என்னின் அற்றன்று. புருடனென்னும் சொல் அந்தவிடத்து விசேஷணமாகாது தனது ஆற்றல் கெடாதிருந்தால், நீவிர் கருதிய பயன் கைக்கூடும். அங்ஙனமில்லாது மற்றதற்கு விசேஷணமாய் நிற்றலாலென்க. அங்கு புருடசப்தத்தைப் பூரணனென்னும் பொருளிலாதல் "யான் முன்னேமேயிங்கி ருந்தேன். அதேபுருஷனின் புருடத்துவ" மென்று பங்கயத்தானை நோக்கிப்பத்மநாதங் கூறியதாகமெழுந்த சுருதி வாக்கியத்தால் இரண்யகர்ப்பனுக்கு முன்னிருந்தவனெ னும் பொருளிலாதல் அமைத்து நாராயணன் என்னும் சொல்லுடன் அனவகிக்கக் கூடும். ஆதலின் மேற்கண்ட பிரயோகம் புருடனென்னும் சொல்லை நாராயணன் பரமாக்க வலியற்றொழிந்ததென்க. 'புருடனன்றே ருத்திர' னென்றவிடத்து "இஃதப்புருடனுல் பரிபூரணம், என்று உபக்கிரமத்தில் தொடங்கியதைத்தழீஇயும் "யாண்டு கன்மவழு, யஞ்ஞத்தின் வழு நேரிடும். ஆண்டு புருடனைச்சிந்தித்துப் புருடசூக்தத்தை உச்சரித்தல் வேண்டும். பூர்ணனுய் நிற்றலாலன்றே புருடனென்று சொல்லப்படுகிறுன்' என்ற வாதூல முனிவர் கூற்றத்தழீஇயும் புருடனென்பவன் சம்பூரணனென்று முற்காட்டிய வசனத்தைத் தழீ இயும், பூரணத்தன்மையைச் காரணமாக்கிப் பரமேசுவரனிடத்தில் சேர்த்து (1) அநுவாத முகவிதியாம் அச்சொல் லுக்கு அவனைப்பொருளாக்குதல் உசிதமென்றறிந்துய்க. பின் மீமாஞ்சகர் கூறும் (2) உத்பித அதிகரண நியாயத்தால் அச்சொல்லைப் பரமேசுவரனுக்கு இடுகுறியாக்கவுமா க்கலாம். மேல 'பரத்தினும் பரனுய்ப்புரியில் நிகழும் புருடனைக் காண்பான்' என்பதாதி சுருதி வசனங்களைக்கொண்டு சமயத்திற்கேற்ப மற்றைய பொருளையும் அமைக்கக் கூடும்.

---

(1) அநுவாத முகவிதியாய் = அனுவாத முகவிதியென்பதை வறுமாறு காண்க. ஆஹிதாக்கினிக்குச் ஆஹிதாக்கினிக்குச் செய்யும் உத்திரகிரியையில் ஜுஹு, உப்பிருத்து என்னும் இருபாத்திரங்களைக் கீழுமேலுமாக எடுக்கவெண்டுமென விதித்து தேவர்களுக்கன்றே மேலுங் கீழுமாய் எடுப்பது' என்று அநுவதிக்கப்பட்டி ருக்கின்றது. இவ்வனுவாத முகத்தால்தான் தேவகாரியங்களில் அஜ்ஜுஹு மேல் எடுக்கப்படுகின்றவதற்கு விசி இவ்வனுவாதமே ஆகின்றது. அதுபோலிண்டு 'புருடன ன்றே ருத்திரன் என்ற அனுவாதத்தால் ருத்திரன் புருடச்சொற்குப் பொருளாகின்றுன்.

(2) உத்பித்அதிகரணம் 'உத்பித்துனுல் வேட்க' என்னும் விதியில் உத்பித்தென்பது உலகவழக்கில் மண்வெட்டியைக்குறிக்குமாதலின் மண்வெட்டியைக்கொண்டு வேட் டலங்ஙனம் அமையுமெனவையம் நிகழ்ந்துழி அப்பொருள் பொருந்தாமையின் அங்கு விதிக்கப்பட்டவேள்விக்கு அவ்வுத்பித்து என்னுஞ்சொல்லை இங்கு குறியாக்கி யது. அதுபோலீண்டும் 'புருடனன்றேருத்திரன்னபுருடனன்றே வென்றவிடத்தும் மனிதன் ஆன்மாவென்ற பொருள்கள் ஒவ்வாவழி அது அவனுக்கு இடுகுறியாய் அமையுமென்க.

மேல் பூர்ணத்வம பொருளாய்ருத்திரனைப் புருடச்சொல்லுணர்த்த அங்ஙனமே புராணங்களு மோதுதலால் அவ்வாறு கொள்ளாது சரீரத்தில் நிகழ்வானெனும் பொருளைக்கொண்டுபயோகிக்கப்படும் புருடனென்னும் சொல் இலக்குமிபதியை இலக்காக்கத்தடையேது? 'புருடவெனப்படுஞ் சரீரத்தின கணிகழ்தலால் அரிபுருடனெனப்படுவான' என்பதாதிப் பிரமாணங்களிருத்தலாலெனின் அது கூடாது. மேற்காட்டிய வேதோபப்ரம்மணவசனமும் மூலவிருத்தம். வேதம் 'புரிசயம்' என்பதால பூர் என வழங்கப்படும சரீரத்தின் கண் நிகழ்வானெனப்பொருள் கொடுக்கின்றது. இப்புராண வசனம் 'புரு' எனப்படும் சரீரத்தின் கண் நிகழ்பவன் புருடனெனச் சாதிக்கின்றது. வேதங்கண்டவழி என்னும் சொல்லுடன் 'ச' என்னுஞ் சொல்லைச் சேர்த்தால் புருடனென்னுஞ் சொல்லமைகின்றது. புராணவழியில் 'புரு' என்னும் சொல்லுடன் 'ச' என்னுஞ் சொல்லேற புருடனென்றமைகின்றது. ஆக அந்த வேதத்துக்கு இது உபப்பிரமமணமாகாதன்றே. இனிமேல் எவ்விதமாயினும் 'புருட' னென்னுஞ்சொல்லுக்கு அரியும் பொருளாகின்றதே யென்று விதண்டைபேசின் 'ஸஹஸ்ராக்ஷன்' என்னும் சொல்லிணடிருத்தலால் இவ்விரண்டு சொற்களும் எப்பொருளிடம் வேதவழக்கில் உடனிகழ்ந்தனவோ அப்பொருளை யீண்டும் பொருளாக வேண்டுமென்பது உசிதமாதலின் புருட சூக்தத்தொடக்கத்தில் 'ஸஸ்ராக்ஷ' னென்னும் சொல்லுடணிகழ்ந்த 'புருட' னென்னும் சொல் பரமேசுவரனிடமன்றி வேறெக்கடவுளிடமும் சேராதென்பது வயிரப்பூச்சாயிற்று.

புருடனை 'ஸஹஸ்ராக்ஷனையறிவோம், மகாதேவனைத் தியானிப்போம்' என்பனவாதி வேதவாக்கியங்களில் மகாதேவனிட மிருசொற்களும் நிகழ்தலாலென்க.

(1) 'ஸஹஸராக்ஷன் புருட' னென்னுமிரு சொல்லுடனிகழ்ச்சிமட்டிலிச்சூக்தத்தைச் சிவபரமாக்கு மேல் 'ஸஹஸ்ரசீர்ஷன், புருடன், ஸஹஸ்ராக்ஷன் ஸஹஸ்ரபாத்' என் நான்கு சொல்லுடனிகழ்ச்சி நாராயணனிடத்திற் காணப்படுதலால், அவனே இச்சூக்தப்பொருளாய் அமைதல்வேண்டும். அங்ஙனமாயின் நாராயணபூஜையில் விநியோகமும் புராணங்களில் விஷ்ணுபரத்லத்தில் இச்சூக்தத்தை விவரணம் செய்ததூஉம் முரணுதொழியும். ஆருணகேதுகத்தில் 'பூதம்நடக்க' என்று தொடங்கிய

(2) கூர்ம உபதானவிதியின் அர்த்தவாதத்தில் 'யான்முன்னமே யிங்கிருந்தேன் அதுவே புருடனுக்குப் புருடத்வம் என்று கூர்மாவதார சின்னம்பெற்ற ஸ்ரீமந் நாராயணனது திருவாக்கு இரண்ணியகர்ப்பனை நோக்கி யெழுந்ததாகக்காட்டி பிறகு

(3) 'ஸஹஸ்ரசீர்டன், புருடன் ஸஹஸ்ராக்ஷன் ஸஹஸ்ரபாத்தாகிக் கிளம்பினு' னென்று காணப்படுகிறது. ஆகவே இந்நான்கு சொற்களானும் ஒருங்கு சேர்ந்து உணர்த்தப்படும் பொருள் நாராயணனென் மேற்காட்டிய சுருதியாற்பெறப்படுதலாலும் இச்சூக்தம் தொடக்கத்திற்றுனே அந்நான்கு சொற்களையும் மகுடமாய்ப்பெற்றிருத்தலாலும் நாராயணனே இச்சூக்தத்துக்கு முக்கியப்பொருளாவான் எனில் அற்றன்று. இவ்விடத்து இரண்ணியகர்ப்பினை நோக்கிச் செங்கண்மால் அவனுக்கு முன் நிகழ்வானாகலின் தான் புருடனெனப் புருடச்சொல்லுக்குப் பொருளுரைத்ததுண்மையாயினும் இச்சூக்கத்தில் முன் எடுத்தோதிய பலவுயிருங்கணவசனங்க

ளால் பூரணத் தன்மைபற்றி புருடச் சொல்பெற்ற பொருளே பிரதிபாதிக்கப்படுமெனத் துணியப்படுதலானும் ஆகங்கொண்டே யடுத்தமந்திரத்தில் 'புருடனே' சென்றது வருவதெவை யவையெல்லா மென்று காணப்படுதலானும் பரிபூரணனென்னும் பொருளில் புருடபதம் பரமேசுவரனையே குறிக்குமென்பதற்கு 'சர்வமுமன்றே இந்தருத்திரன்' என்னும் வேதவாக்கியம் 'புருடனன்றே' என்று தொடங்கியதற்கு பொருளுரைத்தவாறு நிற்றலானும் புருடனேருத்திரன்' என்று முன் எடுத்தோதிய மந்திரங்கள் கண்டவழி அப்புருடச்சொல்லை வேதம் சிவபரமாக்கிநிற்றலானும் 'விசுவாதிகள், ருத்திரன், மகரிஷி' என்னும் மந்திரத்தொடர்புடன் தோன்றிய அவனுலிது பூரணம் புருடனுலெலலாம் என்ற வசனத்தாலும் பூரணத்வங்கொண்டு புருடத்வம் பெறுவது பரமேசுரனே யென்று ஏற்படுதலாலென்க. மேற்கண்ட சுருதியை வேறுவழிபொருட்படுத்தலும் கூடாது. ஈசன் 'விருக்ஷம்போலசைவற்று ஏகனுயாகாயத்திலிருக்கின்றன், அம்மகானுன்மாவாய புருடனுல் ஈதெல்லாம் பூரணம்' எனும் புராணவசனம் அதற்கு உரையிட்டு நிற்றலாலென்க. மேற்காட்டிப் போந்த பலபிரமாண சகித யுக்கிவிசேஷங்களால் ஈண்டு 'புருட' னெனவிரிக்கப் பட்டது எம்பிரானே யென்க. புர = புரங்களை (திரிபுரங்களை) உஷதி = கொளுத்துபவன் புருடனென்றும் 'புருஷ' என்று பொருள் காட்டி பூருஷ: என்று வரவேண்டுவதை குறுக்கல் விகாரமாயமைத்து முப்புரம் எரித்த முதல்வனிடம் சேர்த்திட வடலிபல் வாளேந்திய பண்டிதர் அனேகருளாகென்பது வேறு.

---

(1) ஸஹஸ்ராக்ஷன் = ஆயிரங்கண்ணன்.

(2) கூர்ம உபதானம் என்றது கெருடசயனத்தில் உயிருள்ள ஓர் ஆமையை நிலத்தில் மந்திரபூர்வமாய்வைத்தலாம்.

(3) 'ஆயிரஞ்சென்னியன், புருடன், ஆயிரங்கண்ணன், ஆயிரம் பாதன், என்பன முறையே பொருள்கள்.

'ஆயிரஞ்சென்னியன்' ஆயிரம் அளவிலடங்காதசென்னிகளைப்பெற்றுளான்; உலகமெலாம் அவனது திருமேனியாகவே உலகத்துள்ள உயிர்க்கோடிகளின் சென்னிகள யாவும் அவனதாயும் சரிக்கப்பட்டதென்க. இங்ஙனமே ஆயிரங்கண்ண னுதி யடைசொற்களையுங் பொருள்படுத்தவேண்டும்.

'உண்மையில் தேவர்கள் ருத்திரனை யஞ்ஞத்தை விட்டு விலக்கினர்கள். அவர் யஞ்ஞத்தை யழித்தா' ரென்று பிரசித்தமாய் வேதத்திற் கொண்டாடப்பட்ட தட்சயஞ்ஞசம்ஹாரகாலத்து ஏனைய ஏழைத்தேவர்களை யெல்லாம் புறக்கணித் தோடச் செய்த அகோர வீரபத்திரதிவ்விய மூர்த்தியின் கண்ணின்று ஆயிரஞ் சென்னிகளாதிப்பல அற்புதவிலக்கணங்களைக் கண்டு தேவர்கள் மயங்கினர்களெ ன்பது எல்லோருமறிவார்கள். மேலும் 'ஆயிரமாயிரக்கணக்காகப் பூமியின்கணுள்ள ருத்திரக்கூட்டங்கள் எண்ணிறந்தபல்வாயிரங்கள் திவ்யகணங்கள் பலரூபமெய்தின. ஸ்திரமான அவயவம் அமைந்தபலரூபமுள்ளவன் ருத்திரன் என்றறற்றெடக்கத்தன வானபற்பலவசனங்களால் இவ்வுலகத்தைப்பற்பல மூர்த்திகளையதிட்டித்து ஆண்டு வருந்தன்மை யெம்பிரானிடத்தேற்றப்பட்டமையானும், பரமரகசிய சிவமூர்த்திகளி ருபத்தைந்தில் 'அஜனேகபாதன் என்னும் வைதிகதிவ்ய மூர்த்தியுஞ்சேர்ந்ததாகை

பால் ஒருகாலுக்கொருதஃலயாக ஆயிரத்துக்காயிரங்காலென்று குறித்தலும் அமையு மென்க. அங்ஙனமஹாபாரதம் சௌத்திக பர்வம், கூர்மபுராண முதலிய பலவிட ங்களில் எடுத்தேத்தப்பெற்ற பரசிவ வீபூதிகணங்கவ்பிரமன் முகத்தவதரித்த நம்பிரான் பிரதிபிம்பங்களெனக் குறிக்கப்பட்டமையாலும், அப்பரமனது பிரதிபிம்ப ருத்திர மூர்த்திகளில், ஏகாட்சதிரு முகூஷர்த்தமும் உளதாதலின் இவரிடத்தேயாயி ரஞ்சென்னி, ஆயிரங்கன், ஆயிரமகாலென்பன திவ்யலட்சணங்களாய் முடிந்தன. இம்மட்டோ! இவ்வாயிரங்கண்ண ளென்னும் பெயரைக்கண்ணுதல் வள்ளல் பெயர்க ளுடன் கலந்தோதும் வழக்கம் வேதங்களிற்பல விடங்களிலுளது. எங்கெனில் "புருடனையறிவோம். ஸகஸ்ராட்சனுகிய மஹாதேவனைத் தியானிப்போம். நீலக்கிரீ வன்ஸகஸ்ராட்சனுக்கு வணக்கம். ஆயிரந்தூணிகொண்ட ஆயிரங் கண்ண! உனது வில்ஃலபொழித்து" என்பனவாதிபல. மேல் இதே மந்திரங்கள் சுவேதாசுவதரசாகை யைச் சேர்ந்த மந்திரோபநிடதத்திலும் படிக்கப்படுகின்றன. அவ்விடத்தில் 'எங்கும் சிரமும், கண்டமும் பெற்றவன், எல்லாபூதத்திதயத்துமுள்ளான், சர்வவியாபி, பகவானுதலின் எங்கு நிறைந்தவனேகசிவனே' யென்று துணிவுரை கூறிய மந்திரங் காணப்படுதலால் முன்பின் முரணுதபடி வேறுபொருட்படுத்த முடியாது. அதன் துணிபு அச்சுவேதாசுவதர உபநிடத்துக்கு யாம் இயற்றும் பாஷியத்திற் கண்டுகளிக்க. இனி இந்திரனுக்கு ஆயிரங்கண்ணனென்பது இடுகுறிப் பெயராக விருத்தலால் அவன் அதன் பொருளாயமையாஞே வெனில் பிரகிருதமானபரமகாரணவஸ்துவின் கண் உபயோகிக்கப்பட்ட இச்சொல்ஃல இவ்விழிதோர்களிடத்து உபயோகப்படுத்த எந்த வைதிகனும் இணங்கான். 'அவன்' முற்கூறிய இலக்கணமமைந்த பரமான்மா 'உலகை' காண்பொருளனைத்தையும், ஈண்டு உலகையென்று குறித்தது ஏகதேசக்குறி வழியாமென்க. 'விசுவத்துவியாபித்து' எங்கும் வியாபித்து உலகத்துக்குபாதானம் பிரமமேயாதலின் ஆடையில் நூல் வியாபித்து நின்றது போல் உலகத்தில் கடவுள் வியாபித்து நிற்கின்றுனென்பது கருத்து. எள்ளுக்குள்ளெண்ணைபோலென்பதுமதாந் தரம். 'விசுவத்து, மேற்குறிக்கப்போகும் விராட்ரூபத்தைய திட்டித்து அல்லது விராட் ரூபனுகி அல்லதுவிசுவனென வழங்கப்படும் நாராயணனையதிட்டித்து அல்லது அவன் ரூபனுகி 'யெங்கும்வியாபித்து, என்பது பொருள். ஆதலாற்றுன் 'உள்ளும் புறம்பும் இவ்வுலகத்தை வியாபித்துநின்றுன் நாராயண, னென்று மஹோபநிடதங் கூறுகின்றது. ஈண்டு 'விசுவ' மென்னும் பதம் விண்டுவையே குறிக்கும். 'விசுவன், நாராயணன், பரன், என்னும் நிகமத்தானும், விசுவும், விஷ்ணு, என்னும் பாரத வசனத்தானும் என்க.

அற்றேல் விசுவம், என்று உலகத்தை யெடுத்து அஃது 'நாராயண, னென் அதனிடத்து நாராயணதாதாத மியத்தை விதித்தல்மேற்கண்ட சுருதியின் பொருளா காதோ வெனின், அற்றன்று. 'இவ்வுலகத்தில் காண்பதெல்லாம், என்று தொடங்கிய மேல் வசனத்தால் இதே பொருள் குறிக்கப்படுதலின், கூறியது கூறலென்னுங் குற்றம் வாராவழி முற்கூறிய பொருள் கொடலே யுசிதமாதலாலென்க. இதன் விரிவு மற்றேரிடத்திற் காணலாம். 'அதன்மேல் ஈரைந்தங்குலமிருந்தனன், இதனுல் காண் பொருள், காட்சி, காண்பான், என்னும் திரிபுடி நீங்கிய விடத்து முத்தியென்னும் சொரூபானந்தம் நிஃலபெற்று நிற்குமாகவே அவித்தியாமய பிரபஞ்சத்தை அவன் திருவருள் வியாபித்த தென்றது, 'ஈரைந்தங்குல மென்று, அளவுகாட்டியது முற்பகுதி

யில் 'ஆயிரம், என்றதுபோல் உபலக்கணச்சொல்லாகவேயமைதந்து. ஆதலினிவ் விருக்கின் பொருள் இது..

ஆயிரம் சென்னியன் = அளவிலாச் சென்னியன் - அல்லது வீரபத்திராதித்திரு வுருவங்களில் அமைந்த ஆயிரம் சிரசு களுள்ளவன். ஆயிரம்சண்ணன் = அளவிலாக் கண்களுடையவன் அல்லது ஒரு திருமுகத்துக்கு ஒருகண்ணுக ஆயிரங்கண் களுடையான், அல்லது உலகத்திற் காணுத நுதற் கண்ணுயிர முடையான் அல்லது கண்ணென்னும், சொபல்புலன்களைக் குறிக்குமாதலால் புலன்களை நடத்துவோன் 'ஸ்திரங்களான பல அங்கங்களால் பற்பல ரூபங்களைப் பெற்றவன் உக்கிரன், என்னும் வேதத்தால் என்க. ஆயிரம் பாதன் = அளவிலாப் பாதமுடையான், மூர்த்திக்கு ஒருபாதமுள்ளானுதலால் ஆயிரம் பாதனென்றது. அல்லது ஆயிரக்கணக் கான ருத்திரர்களால் வழிபடப்படுபவன் என்னும் வினை என்னு மிடைச் சொல்லோடு கூடி வழிப்பாட்டைக் குறிக்குமென்க; அல்லது ஆயிரக்கணக்கான அண்டங்களினிற் பவன். ஆயிரம்பாதன் அல்லது அளவற்ற உபநிடதங்களால் பிரதிபாதிக்கப்படுபவன். புருடன் = பூரணனுகிய பரமேசுவரன் (மேற்கண்ட இலக்கண முடைய எவனென) வருவித்து அப்பரமேசுவரன் 'உலகை, யென்பதாதிகளைக் கூட்டி முடிக்க.

முதன் மந்திரம்
முற்றிற்று

இரண்டாம் மந்திரம்

இனி 'முதல்மந்திரத்தில் சச்சிதாநந்தனுனபரப்பிரமத்திடத்து (1) அத்தியாஸம்' செய்யப்பட்ட இப்பிரபஞ்சத்தையே அவருக்குச் சரீரமாகக்கற்பித்து இதற்கு (2) அத்தியாரோபாவாத நியாயத்தால மேல் 'இங்ஙன மூலகைக்கற்பித்தனரே, என்று சமஸ்த பிரபஞ்சங்களும் அப்புருடனிடத்தில் கற்பிதமென்று குறித்து உலகெலாமொ ழிந்த உண்மைப்பொருளை அப்ரோட்சமாயலிதலே முக்திக் குபாயமென்று 'அவனிவ ன்றன்னை யறிந்தவன்றனே அமிர்கனிங்காவானன்றே (யரிய), எனத்துணிந்தோதி அப்பேறறிவில்லாப் பேதையர்க்கு 'வீடுகூடவழிவேறிலேயே' யென வீட்டின் பேற்றை யும் விலங்கப்போகின்றுர். இவற்றுள் (3) அதிஷ்டான சத்தையைக்கொண்டு (4) உள்பொருள் போலத் தோனறுமுலகம், இப்பியில் வெள்ளிபோல போலிப்பொருள் களாகவே, அது பரவஸ்துவைக் கவர்ந்து நிற்றலெப்படி? அது சரீரமாயின் அது கொண்டு 'ஆயிரஞ்சென்னியன், முதலிய சரீரதர்மங்களைப் பரத்தினிடத் தேற்றலாம்; அன்றிக் கடவுளால் வியாபிக்கப்பட்ட தென்றுவது முயற்கோடு போன்ற இப்பிரபஞ்ச த்தை விசுவன் வழிவியாபித்து என்றுவது எடுத்தோதலாம், என்று ஆசங்கை நிகழ்ந்துழி 'எங்குங் கண்ணுளான், எங்கு முகமுளான், எங்குங்கையுளான், எங்குங்காலுளான் அவனுல் இது பூாணம் புருடனுல் எல்லாம்' என்ற தொடக்கத் தனவான அநந்த சுருதிகளில், இவ்வாறு நிகழுமாதலின் அவ்வாசங்கையை இவ்விரண்டாவது மந்திரந்தால் ஒழித்தருளுகின்றுர்.

"புருடனே, சென்றதுவதெவையவையெல்லாம்
அமிர்தத்தன்மையதீசானன்னே
அன்னத்தவனே கரந்தொளிர்கின்றுன்"

என்று, எது 'சென்றது, எது வருவது' என்பது நிகழ்வதையும் குறிக்கின்றது ‘சென்றதுவருவது நடப்பதற் கீசன் என்பதாதி வசனங்களில், முக்காலநிகழ்ச்சி யுணர் த்தப்படுதலாலென்க. இங்ஙனம் முக்காலத்துள்ளதும் சத்துமெனப் புலப்படும் பொருள்கள். எல்லாம் = அவயவமுள்ளன. புருடனே = பூர்ணனுகிய ப்ரம்மமே 'எல்லாம் பிறந்த்து புவனம் சித்திரம், இறந்தது பிறப்பது எது எல்லாம் இந்த ருத்திரனே' என்னும் சுருதி வசனம் இப்பொருள் கொண்டே முடிந்தது என்க. மண்ணி னிடங் கற்பிக்கப்பட்டு அதனுண்மையைக் கொண்டு தன்னுண்மையைத் தரிக்கும் குடமாதி பொருள்கள், மண்ணின்றித் தனித்து நில்லாது. மண்ணென்னும் காரணப் பொருள் காரியத்தன்மையாய் குடத்தன்மையன்றியும் காணப்படும். அதுபோல் பரப்ரம்மமும் தம்மிடத்தாரோபிக்கப்பட்டு (1) விவர்த்தகாரியமாய்த் தோன்று மிவ்வு லகத்தின் வேறுச்சிற்கன சுவப்பிரகாச வடிவமாய் நிற்குமாயினும், அநாதிமயக்க ஆட்சியிலாழ்ந்த ஆன்மாக்களாய (2) பத்தர்களுக்கு உலகமாகவும் தோன்றும். நுண்ணறி வில்லாதானுக்கு மண்ணும் குடமும் வேறுகத் தோன்றுவது போல, உலகத்தில் சிற்பேதஞானமும் உண்டாவது கூடும். பற்பல ஜன்மங்களிற் செய்த புண்ணிய பரிபாகத்தால் சித்தசுத்தி பெற்ற முமுட்சுவினது புலன்கள் பிராரப்த மிகுதி உரையிலிருப்பினும் வெந்த ஆடைபோல் அமைப்பின்மட்டும் தோன்றிக்காரியாப யோகமின்றி நிற்றலால் அவனுக்கு இவ்வுலகம் பிரமவிவர்த்தமாகவே தோன்றுவ தன்றி மற்றையாகாதென்று அவனே நோக்கிக் கூறியது இஃதென்றறிக. அது கொண்டே 'மரத்தில் ஆனையும் ஆனையின் மரமும் மறைவது போல், உலகத்தில் ஆன்மாவும் ஆன்மாவின் உலகும் மறையு' மென்றன ரான்றேர். அங்ஙனம் ‘கண்டுங் காணுது நிற்பான் யோகி' யென்றும் (3) உலகெலாம் மயங்குமிடம் யோகி விழித்திருப்பான்; உலகம் விழிக்குமிடம் யோகிக்கு இருளாய்த் தோன்றும்' என்பதாதி வசனங்கள் எழுந்தன வென்க. 'எங்கு இவனுக்கு எல்லாம் ஆன்மாவாகும் அங்கு எதனுல் எதைக்காண்பான், அஃது பெருமை' என்பதாதி பல சுருதிகளில் வெளிவந்த வாறு அவ்வித்தை ஒழிந்தக்ஷணத்தே பிரகாசித்து பிரபஞ்சம் நீங்கப்பெற்ற நித்திய நிர்மலச்சச்சிதானந்த சுத்த பிரம சொரூபமே முக்தியாதலால் அஃதே ஈண்டு ‘அமிரதத்தன்மை' என்னும் சொல்லால் கூறப்பட்டது. அஃது ப்ரம்ம ரூபமாதல் பற்றியும் (4) தமது சத்தையீற்றும சுதந்திரரானது இன்றியமையாதாகவே சுத்தபிரம சொரூப முக்திக்குப்பிரமமேசுதந்திர மெனக் கூறகின்றுர். அமிர்தத்ததன்மைய தீசானனனே, என்று ‘எதைச் செபித்தால் அமிர்தத்துவத்தைப் பெறுவான் உபதேசித் தருள்வாய்' என்று சீஷர் வினுநிகழ்த்தி ‘ருத்திரசங்கிதையால் அஃது அமிர்தனது திருநாமம் அடக்கியதன்றே' என்று குருவாக்கியத்தை ஜாபாலோபநிடதம் வகுத்தலா னும், ஸ்ரீருத்திர சங்கிதை சிவநாம பரிபூரண மென்பது எவராலும் மறுக்கவொண் ணுக உண்மையாதலானும்' ஹிரண்யபாகு ஹிரண்யபதி 'ஹிரண்யரூபனே வீடுஉடவழிபடுக' என்பதாதி பல சுருதிகளில் ஹிரண்மய னெனக்குறிப்பிடப்பட்ட பிறை குடிப்பிரானே ஹிரண்மயனெனக்குறிப்பிடப்பட்ட பிறை சூடிப்பிரானை ஹிரண்யமயனென எடுத்து அநுவதித்து ‘அமிர்தன் ஹிரண்மயன்' என்று அவனே

அமிர்தபதப் பொருளாக்கிச் சுருதி கூறுதலானும் அங்ஙனம் 'இவனுனதான்மா, அந்தர்யாமி, அமிர்தன்' என்பதாதி வாக்கியங்களிலும், வேறே எக்கடவுளர்க்கும் கிட்டா அஷ்டமூர்த்துத்தன்மை யெடுத்து அவ்வமிர்தபதப் பொருளிடத்து, அந்தர்யாமி பிராம்மணம் 'எவன் நிலத்தினின்று' என்று தொடங்கி 'எவன் ஆன்மாவினின்று' என்றதுவரை துணிந்து ஓதுதலனும் அமிர்தம் என்னும் சொல் சுத்த பரமசிவ திவ்விய சொரூபத்துக்குக்காரண இடுகுறிப் பெயர் ஆதலாலும் உபாதியில்லாத திவ்விய சொரூபத்தை முத்தியெனல் பொருந்துமாதலாலும் அந்தமுத்தியே ஈண்டு அமிதத்தன்மை என்றது.

---

1. விவர்த்தகாரியம் = இப்பியில் வெள்ளிம்பால அதிட்டானம்விகாரப்படாது பரிணமித்தல்.
2. பத்தர்கள் = மலத்தில் கட்டுண்ட ஆன்மாக்கள்.
3. உலகெலாம் மயங்குமிடம் உலகத்தவர் வெளிப்படையாய்க் காணுத பிரமத் தைக்குறித்தது. யோகிவிழித்திருப்பான் என்றது அதை யோகி காண்பானெனப் பொருள் கொடுக்கும். உலகம் விழிக்குமிடம் என்பது காண்பொருளாய் பிரபஞ்சத் தைக் குறித்தது. யோகிக்கு இருளாய்த்தோற்றுமென்பது ஸ்வாநுபூதிக்குத்தோன்று தெனபொருள்கொடுக்கும்.
4. தமதுசத்தை = தம்உண்மை.

அமிர்தத்தன்மையது = சிவத்து அபீவியக்தி ரூபமான முக்தியினது அல்லது ஆன்மாவிடத்து அசி னெனும் மயக்கம் ஒழிந்தவுடன் பிரகாசிக்கும் அநாதிசுயம் பிரகாச சிவஸ்வரூப மெனப்படும் முத்திக்காவது ஈசானன் = நாதன் பரம்பொருளாய பரசிவன் இனி 'எதனுலவஊ ஈசானனென்பர்? எவன் உலகெலாம் தன்பரமசந்திக் குட்படுத்தியாளுவன்' எதூர கறவையில்லாமாடுபோன்றயாம் தாவரம். ஜங்கமங்க ளான இவ்வுலகத்துக்கு நாதனுன ஈசானன்; மோக்ஷத்துக்கு வழிகாட்டும், பரமேசுவ ரர் முதல் உன்ஊ இடைவிடாது சரணடைந்து, இடைவிடாது ஸ்தோத்திரம் செய்வோம். ஆதலால் அவன் 'ஈசானனெனப்படுவான்' என்று அதர்வசிரோபநிடதம் கூறுசலானும் 'ஆதலால் ஈசானன், மகாதேவன்' என்று மகோபநிஷதம் வற்புறுத்தி னமையானும், அவனன்றே ஆன்மா, ஈசானன், சம்பு, பவன், ருத்திரன், என்று மைத்திராயணுேபநிடதம் கூறுதலானும் இன்னும் அனேகபிராம்மணங்களானும் ஈசானனென்னும் சொல் எமது ஈசஊயே குறிக்குமென்க.

அற்றேல் 'ஈசான னென்னும் சொல்' இடுகுறியாற்றலால் இங்கு எப்பொருஊ யும் குறிக்காது. அதனிடுகுறியாற்றஊத் தொஊத்துக்காரணவாற்றஊவிளக்கிட அமிர்தத்தினது என்று எதிர்மறைப்பொருஊக்கூறும் சொல்லிருத்தலால் அதனுடன் பொருட்பொருந்தும் வழி இங்கு அமிர்தத்தினது நாயகனென்றே காரணப் பெயராய்க் கொள்ளவேண்டியதே யன்றி முற்கூறியவாறு இடுகுறிப்பெயராய் 'ருத்திரன்' என்று பொருள் கூறல் அமையாது. அங்ஙனம் கொள்ளின் 'குடங்கஊப் படைத்தவன் கேரளங்களுக்கு ஈசுவரன்' என்பதாதி வாக்கியங்களில் பிரம்ம தேவன் 'ருத்திரன்' இவர்கள் 'படைத்தவன் ஈசுவரன்' என்னுஞ்சொற்களுக்கு விபரீதப்பொருளாக நேரிடும். ஆயின் முற்கூறியது எங்ஙனம் பொருந்து மெனிற் கூறுதும்.

'எவ்விடத்தும் எதிர்மறைப்பொருளைக் குறிக்கும் சொல்லொன்று, நிகழும் அதனுடன் பொருந்து மற்றைய சொல், தமது இடுகுறிப்பொருளையுணர்த்து மாற்றலை இழந்து விடு' மென்று எவ்வரசரிட்ட ஆணையும் இல்லை. அங்ஙனம் அந்நூலாசிரி யரும் எடுத்து வகுத்தாருமில்லை. அவ்விதநியமம் இல்லாமையாற்றன் வியாகரண மகாபாடியம் வகுத்தருளிய ஆசிரியர் பதஞ்சலியர் 'பிரதிடதோக்த சப்தங்களினது சப்தபாராயணத்தைக் கூறினர்' என்றனர். இதனுரையாசிரியர் கையடனார் 'சத்த பாராயணமென்பது ஓர் நூலுக்கு இடுகுறிப்பெயர்' என்றனர். இங்கு 'சப்தங்களினது' என்ற ஆறும் வேற்றுமையின் பொருளாகிய சமபந்தம் 'சப்தபாராயண மென்னும் சொல்லின் ஏகதேக்காரணப்பொருளாகிய பாராயணத்தில் சேர்கின்றது. அதனால் அதனிடுகுறியாற்றல் கேட்டதில்லை. அங்ஙனமே 'வேதங்களினது வேதம்' என்னும் சாந்தோக்கிய வசனத்தில் 'வேதம்' என்னும் சொல் அறியும் கருவியெனப் பொருள் கொடுத்து வேதங்களினது என்ற ஆறும் வேற்றுமை ஈற்றுச்சொல்லோடு புணரு மென்றும்; வேதங்களின் பொருளை அறியும் கருவியாய வியாகரணத்துக்கு வேத மென்கிற இடுகுறிப் பெயரு முண்டென்றும் வடலியல் பயின்றவான்றேருட் சிறந்த ஆசிரியர் நாகேசப்பட்டனுர் சப்தேந்துசேகரத்தில் எழுதினர். அங்ஙனமே பிறரும் (1) 'உனதுவாரணத்தை திருவருட்சங்கிலியாற்கட்டு' என்னும் (2) யானபராத சக்ரவர்த்தி என்னும் பிரயோகித்திருக்கின்றுர்கள். ஆதலால் மேற்கண்ட பிறர் கூறிய ஞாயம் தம்மாலும் பயனற் றெழிந்ததைத் தாமேகண்டு அடங்குவாராக. (3) குடங்களைப் படைத்தவன் என்பனவற்றுள் இரண்டாவதாய் இடுகுறிப் பொருள் கொள்வதிற் பயன் யாது மில்லையாதலால் அப்பொருளும் அங்கு தோன்றுவதில்லையென்க. இதன்விரிவு 'சத்தத்தாலன்றே அளக்கப்பட்டவ' னென்னும் சூத்திரத்தையும் 'இறந்தது வருவது எல்லாவற்றிற்கும் ஈசானன்' என்னும் மந்திரத்தையும் விசாரித்தருளிய சிவாத் வைத வித்தியாசாரிய ஸ்வாமிகள் சிவதத்துவவிவேகத்தில் நிரூபித்திருகின்று ராதலால் ஆண்டுகண்டுணர்க.

---

(1) உனதுவாரணத்தை = ஈண்டு வாரணமென்பது ஆனையையும் தடுக்கும் கருவியையும் குறித்து தடுக்கும் கருவி யென்பதை உனது என்னும் சொல்லில் பொருந்த ஆனையென்னும்பொருள் தன்னிடம் அமையப்பெற்றது.

(2) அபராதசக்கிரவர்த்தி = ஈண்டுசக்கிரவர்த்தியென்னும் சொல்படையை நடத்துபவன். போசன் என்று இருபொருளைக்காட்டி முற் பொருளில் முன்பதம் பொருந்த பினபொருளைத் தன்னதாய்ப்பெற்றது. இவ்விருசொற்களும் பாஞ்சராத்திரி களுக்கு ஆசிரியரான வெங்கடநாதகவியெழுதிய தயாசதகத்துள்ளது.

(3) 'படைத்தவன்' இச்சொல்லுக்கு ஒருபொருளை ஆக்கியோனும் பிரமதேவனும் பொருள்.

'அன்னத்தவனேகரந்தொளிர்கின்றுன்' என்பதே காரணாவஸ்தையை மறைத்து காரியாவஸ்தையைப் பெற்றதுபோல் மயக்க வரிவிற்கு விஷயமாதலே * முற்பகுதி யிற் கூறியதற்கு ஏதுவென்க. 'அன்னத்து' அன்னத்தினுல், ஈங்கு அன்னமென்னும் பதம் ஜீவகன்மங்களுக்கேற்றவா றமைக்கப்படும். தனுகரணுதிகளைக் குறிப்பதால் ஆகு பெயர். 'கரந்தொளிர்கின்றுன்' விவர்த்தகாரியமாய்த தோன்றுகின்றுன். உற்று நோக்கின் ஏதும்விகாரமின்றி மாறியதுபோலத் தோன்றுவதே விவர்த்தமாதலா

லென்க. அங்ஙனம் காரிய மூர்த்தியாய்த்தோன்றுதலாற்றுன சென்றது வருவது, என அது வழங்கப்பட்ட தெனக் கொண்டு முன்னடியோடு சேர்த்து பொருள் முடிபு செய்க.

சென்ற இரண்டு மந்திரங்களிற் கிடைத்தபொருள்களெல்லாம், மந்திரோப நிடதத்தின் மூன்றுவதத்திய யத்துள் மேற்கண்ட மந்திரங்களை அவ்வாறே படித்து, பிறகு இப்புருட சூக்தப்பொருளை ஈசானனெனத் துணிந்தோதஎழுந்த 'எங்கும் கைகாலுளது, எங்கும் தலைகண்ணுளது, எங்கும் செவியுளது, இவ்வுலகத்தை வியாபித்தது, எல்லாப் புலன்களின் குணத்தை விளக்குவது, எல்லாப் புலன்களுக்கும் அகப்படாதது, எல்லாவற்றிற்கும் பிரபு, ஈசானனே, 'அவன் எவ்வுயிர்க்கும் உற்ற துணை, என்கிற இருமந்திரங்களால் விளக்கப்பட்டன.

'ஈசானன்னே, என்ற விடம் தேற்றப் பொருள் கொடுக்கும் சொல்லாலியல்பில் அவன் அமிர்தத் தன்மையது ஈசானன் என்றும், பிரபஞ்சம் அவனிடத்துக் கற்பிதம் என்றும் பெறப்பட்டது. அமிர்தத்தன்மை யென்பது பிரபஞ்ச மொழிந்த சுத்த சிவஸ்வ ரூபமான முந்தியைக்கு றித்தது.'ஈசானன், மேற்கண்ட முக்தியாய சிவஸ்வரூபத்தை விளக்குவதிற் சுதந்திரரான பரசிவன் 'இவ்வானமாபிறவசனத்தாலாதல் மேதையா ஸாதல்பன்னூறபயிற்சியாதல் அறியப்படுவானன்று. எவனையவன் அருள்வழியாக் குவான அவனுகேயவன் தன்னியல் விளக்குவான், என்று சுருதி கூறுதலா லென்க. எக்காரணம்பற்றி 'அன்னத்து, ஜீவபோக்கியமான வஸ்துக்களில் கரந்தொளிர்கின் றுன், அக்காரணத்தாற்றுன் சென்றது வருவது என்பதாதி வழக்குக் கிடமாகின்றுன். உற்றுநோக்கின் 'அவனேயுளான் அவனிலும் வேறு அணுவேனுமில்லை; எங்கும் நிறைந்தவனேக (1) நாயகனே, என்றது இம்மந்திரப் பொருளாம்.

இரண்டா மந்திரம்
முற்றிற்று

(2) முற்பகுதியில் இச்செய்யுளின் முதல் இரண்டுபகுதிகளானவை புருடனே சென்றது வருவதெவையவை யெல்லாம் யென்றவிடத்து.

மூன்றும் மந்திரம்

இனிமேற்கூறிய இயல்பொருந்திய பரமான்மாவினது பெருமையை வேறு வழியால் அவனது விபூதிகளைப்புகழ்ந்து மூன்றும் மந்திரத்தால் வற்புறுத்துகின்றுர்.

இன்னவையெல்லாமிவனதுமகிமை
அதனின்மேலும்புருடனுளனும்
எப்பூதங்களுமிவனதுபாதம்
முப்பதனமுதம்வானகத்மதாளிரமே.

என்று இவனது புருடனென பெயரிட்டழைக்கப்பட்ட பரிபூரண பரசிவனது மகிமை விபூதி மகத்தென்னும் தன்மை பரசிவனது சிறப்பிலக்கணமென 'எவ்வுருவத்தையு மாய்ந்துள தீரன்' என்னும் மந்திரப் பொருள் கூறுமிடத்து விரித்திடுவாம். முற்கூறிய படி காண்பொருள் அனைத்துமான அப்புருடன் 'அதன்மேலும் உளனும் இக்காண் பொருள்கள் கோன்றும் அளவே நின்றவனல்ல, அதனினப்புறத்தும் நின்றன வென்பது கருத்து. ஈண்டுமேலென்றது, கீழ் என்பதி னெதிர்மறையல்ல; எவ்வித அளவைக்கும் அடங்கா அப்பொருளையோ ரளவைக்கிலக் காக்குதல் கூடாமைய னென்க. மற்றுமேல் என்றது காண்பொருள்களைப்போல் ஓர் அளவைக்கடங்காதவ னென்று பொருள்படும். இனி அப்பொருளையே வழிபடுவோர் சௌகரியத்திற்காக 'எப்பூதங்களும் என்று விசேடிக்கிறுர். 'எப்பூதங்களும் இவனதுபாதம்' எல்லாப்பூதங் களும் இவனது அம்ச மென மற்றொரு ஸ்மிருதி கூறுதலால் (1) பாதம் என்பது அம்சமெனப்பொருள் தருவதமன்றி, ஓர் அளவைக் குறிக்கும் சொல்லல்ல. முப்பதம் காண்பொருளிலுள்ள அம்சத்தினும் அதிக அம்சம் உள்ளான் வியாபகனென்பது கருத்து. (2) 'எள்ளுக்குள் எண்ணெய், தயிரில் நெய், பிரவாகத்தில்நீர், அரணிபாலக் கினி என்றும் (3) 'விசுவாதிகன் ருத்திரன், மகரிஷி ருத்திரன், மகரிஷி 'என்றும் பலசுருதிகள் அங்ஙனமே விளக்குதலாலென்க. ஈண்டுமூன்றெனும் எண் அதிகத்தை யாதல் இவ்வுலகமாய்த் தோன்றும் அம்சத்தினும் வேறுய அம்சத்தையாதல் குறிக்கு மென்று கொள்க. 'அமுதம் நித்தியமுந்துன்பமற்றதும், ஆனந்த சிற்கனமுமான ஸ்வரூபம் 'வானகத்து சிதாகாசத்தில ஈண்டுவானக மென்றது பூதாகாசத்தை யல்ல 'ஆகாயத்திலுள்ளான் இப்புருடன்' சர்வைசுவரிய சம்பன்னன், சர்வேசுவரன், சம்பு, ஆகாயத்தினடுவில் என்பதாதி சுருதிகளால் என்க.

(1) பாதம் = இஃது நான்கில் ஒருபங்கைக்கு றிக்கும் அதே இவ்விடத்து விலக்கப்பட்டது.

(2) எள்ளுக்குள் எண்ணெய் பிரவாகத்தில்நீர் = என்றது வேறு சித்தாந்திக்கு முக்கிய திருஷ்டாந்தம்

(3) விசுவாதிகன் = உலகத்துக்கு மேலானவன மேலகண்டங்கள்ளுக்குள் என்னும் மந்திரம் காண்பொருள்களனைத்தும் கடவுள் வியாப்தியைக்குறித்தலானும் இச்சுருதி அவன் உலகத்தினும் மேலெனக் குறித்தலானும் இவ்விரண்டும் இம்மந்திரத்துக்கு மேற்கோளாயினவென்க.

அச்சிதாகாசம் பெத்தர்களுக்குப்புலப்படாது. கோபமற்று பிரம்ம சாக்ஷாத்கார ஸுகம் பெற்ற அந்தணரதை ஆகாயத்தின்கண் கண்டு பெருமையெய்துவர் என்றும் பலவிடங்களில் சிதாகாசம் அவ்வமுதனுக்கு இடமாகக்கூறப்பட்டுள்ளது. அது கொண்டே 'ஆகமங்களையறிந்த ஆன்றோர் பூரண ஆற்றலுடைய வெப்பரமனது அம்சாம் சத்தி லிவ்வுலகமைந்துள்ள தெனக்கூறுவர் என்றுரைத்தனர் ஆன்றோர் 'ஆகாயசரீரம் பிர்ம்ம மென்றும் வேதங்கள் ஒலிக்கின்றன. 'ஆகாயம் அதனலிங்க த்தா லெனபிரம (ருத்திரக்காரரும் பரமேசுரனையே ஆகாயமென்க குறித்தனர். பிரமவித்தையாகிய உமாதேவியு மங்கே அமைந்துள்ளா ளெனக் குறித்தற்கே 'அவ்வாகாயத்தில் ஹைமவதியாகிய உமாதேவியை வெகுகாந்தியுடனமைந்த பெண்ணுருவமாகக் கண்டார்.' என்று கேநோபநிடதங்கூறுநின்றதும், ஈண்டு

‘முப்பதன், 'அமுதம், என்றவிரு சொற்கள் அநேகம் பொருள்களை அடக்கி நின்ற வழிகாட்டுகின்றும். எங்ஙன மெனில் ‘முப்பதன்' ஜாக்கிரமுதலிய மூன்றவத்தைகளி லும் உள்ளான், (அவனது) 'அமுகம்' அம்மூவவத்தைகளையுங்கடந்து அவைகளுக்கபி மானியாகிய விசுவன், சைஜஸன், பிராஞ்ஞனெனப்படும் மூவர்க்கும் வேறுய் ஆராய்ந்திட 'அக' மெனத் தனித் தொளிரும் பொருளாய் அஜபாஹம்ஸ மகாமந்திர வுட்கருத்தாய் விளங்கும் ஸ்வரூபம். 'வானகத்து' முற்கூறிய அவத்தைகளைக்கட ந்து துரியாதீதங்களை யவத்தைகளெனக்கூறியது ஜாக்கிராதிகளை நோக்கியே யன்றி உண்மையில் அவை அவத்தைகளாகா; அவைகளின் ஸ்வரூபம் துணிக்கோதப்படக் கூடாமையாலென்க. அல்லது 'முப்பதன்' அதிபூதத்தில் மேரு வெள்ளியங்கிரி. இமையமலையாகிய முவிடத்துள்ளான அவனது 'அமுதம்' திரியம்பக மந்திரத்தில் அடியாரடையும் பொருளாய்க்கு விக்கப்பட்டதும் அமிர்தமிருத்தியஞ்சய மகாமந்திர த்தில் அமிர்தனெனப் புகழ்பெற்றதுமான திவ்வியரூபம் 'வானகத்து பரமாகாச மெனக்கூறப்படும், உன்மனையீறுக எல்லாப்புவனங்கடந்த பரசிவலோகமென வழங்கப்படும் ஸ்ரீகைலாசத்துளது. ஈண்டு பிரமாணம் உமையொருபங்கும், மூன்று கண்களும் சந்திரகலையும் கரியகண்டமும், பரமானந்தத்தாண்டவமும், பரமனிலக் கணம் உமார்த்த விக்கிரதன் வரதன் சர்வகாரணகாரணன், என்பதாதி புராணஸ்மிருத் தியாதி வசனங்களால் சிவபுரமென நாட்டப்பட்ட உமாசகாயன், பரமேசுவரன், பிரபு, திரிலோசனன், நீலகண்டன், பிரசாந்தன்' ‘கிருஷ்ணபிங்களன் உமாபதி, பசுபதி' என்பன வாதித்தகரவித்தை, யந்தராதித்தவித்தைகளின் வசனங்க ளென்க. ‘க்ஷரம் அவித்தை, அமுதம்; வித்தை' ‘க்ஷரம். பிரதானம், அமுதம், அக்கரம், 'அமுதன் புதல்வர்காள் அனைவரும் கேண்மின்" இவ்வுலகத்தை வியாபித்த ஏகாசனை யறிந் தோர் அமுதராவார்' ‘அறத்துக்கீசன பாபநாசன், பகவான், உயிர்க்குயிர், அமுதன் உலகத்துக்கிடமாயுள்ளவன; அவனையறிந்து.' அமுாதத்துக்கக் கறை என்பனவாதி பலவேதவாக்கியங்களில் அமுதமென்னும் சொல் எம்பிரானிடத்தும் அவனுடைய சுத்தசொரூபமாய் மோக்ஷத்தினிடத்தும் அவனது சொரூமாய ஆன்மாவிடத்தும் உபயோகப்பட்டுள்ளதைக்காண்க. மேல் 'முப்பதன்' முக்குணோபாதி பெற்றுப்பல பொருளாய்த்தோன்றும் பரன் (அவனது) அமுதம் = முமுட்சுக்கள் வழிபடும் திவ்வியசொரூபம், வானகத்து = பரமாகாசமெனப்படும் மாயையில் உளது என்பதாதி பலபொருள்களை யூகித்தறிக. இனி இம்மந்திரத்தில் முடிந்த பொருள் இவனது = முன்மந்திரத்தில் ஈசானனெனக் குறித்தோதிய பரசிவனது பாதம் = ஓர் அம்சம் எப்பூதங்களும் = பூதங்களெலாம். முப்பதன் = அப்பூதங்களிலும் அதிகமாயுள்ளவன், அல்லது அவைகளிலும் அதிக வம்சம் பெற்றவன் அல்லது மூவவத்தை கடந்தமுதல்வன், அல்லது மேரு, கைலை இமையமலை என்ற மூன்றிடங்களிலும்மித் தியம் ஆவிர்ப்பவிப்பவன் அல்லது முக்குணோபாதி பெற்று மும்மூர்த்திகளாய் விளங்குபவன் (அவனது) 'அமுதம், நித்தியம், நாசமற்றது, அளவுகடந்தது, அவத்தை கடந்தது ஆன்மரூபமாயுள்ளது. உமையுடன் கலந்து, மாயையிற் றேய்ந்தது. மேற் கண்ட இலக்கணம் பொருந்தியகிருவுருவம் வானகத்தில் = சிதாகாசத்தில், துரிய துரீயாதீதா வத்தைகளில், உன்மனையீறன லோகங்களைக் கடந்த சோமலோக மெனும் கைலாயத்தில் என்பதாதி முறையே கூட்டுக. இன்னவையெல்லாம் = இது வரை குறிக்கப்போவதுமான எல்லாம் இவளது = ஈசானபிரானதுமகிமை; = விபூதி ‘அதனின்மேலும் மேற்கண்டதிருசியப் பொருள்களின் மேலும் புருடனுளனும் =

புருடன் வியாபித்துளனும் 'உலகத்தை வியாபித்தவன் புருடன், என்பதாதிச் சுருதி வசனங்களாலென்க. அளவை கடந்த அற்புதரூடனென்பது கருத்து.

மூன்ரும் மந்திரம்
முற்றிற்று.

நான்காவது மந்திரம்.

இனிப்பரமேசுவரன் காண்பொருளனைத்தும் தோன்று மிடமாதல்பற்றி அவற் றின் குணதோடங்கள் அவனையும் மற்றுமோவென ஐயம் நிகழ அதை நான்காம் மந்திரம் விலக்குகின்றது.

முப்பாதம்முளவிவன்மேற்சென்ருன்
புருடனவனதுபாதமீண்டிங்குள
பின்னருமுணபனவுண்ணுதனவும்
என்பனவனைத்தும்வியாபித்தனனே.

முப்பாதமுள = முற்கூறிய மூன்றுபாதங்களைப் பெற்றஇவன்புருடன் = ஈசானன் மேல் = சமசாரத்தை ஒழித்து 'சென்ருன் = பிரபஞ்ச சம்பந்தமினறிப் பரிபூரணமாய் நின்ருன் இவன் பாபசம்பந்த மற்றவன்' என்பதாதி சுருதிவாக்கியங்களால் 'இவனது' சாசாங்கடந்த சற்சிற்கனனுகிய பரமேசுவரனதுபாதம் = அச்சம் இங்கு = காண் பொருள்களனைத்திடத்தும் உள = உண்டு அதனுற்ருன் அசேதனமாகிய விவ்வுலகம் சேதனம்போலும், அசத்தாயது சத்துப்போலும் தோன்றுகின்ற தென்க, 'எல்லாம் சேதனம் போலத் தோன்றும் ஈசன்சைதன்னியச் சேர்க்கையா லென்றும் 'எல்லாவற்றையும் ஒரு அம்சத்தி லடக்கிநானின்றேன், என்றும் பிரமாணங்கள் கூறுகின்றன. 'மீண்டும்' என்றதனுல் சம்சாரம் அநாதிப்பிரவாகநித்திய மென்றேற் பட்டது. பின்னர், முற்கூறிய ஏதுவால் 'அனைத்து' தேவர், மக்கள், விலங்கு. விருக்ஷம். கொடி, செடி முதலிய எல்லாரூபமாய் வியாபித்தனன். விவர்த்தகாரண மாயினன் (ஆதலால் அவனே) உண்பன = ஜங்கமங்களாகிய மனுஷர் விலங்கு முதவியன. உண்ணுதன் = தாவரம், மரம் முதலியன (ஆயினன்) ‘இவனைமேலும் கீழும் நடுவிலும் அளவிட முடியாது' என்று வேதம் கூறுதலால் மேற்சென்ரு னென்றவிடம்மேலென்னும் சொல் அவனது வியாப்தியை வற்புத்துமேயன்றி இடத்தைக்குறிக்காது. இடம், பொருள், காலம், மூன்றினையும் கடந்தது அவனது சுரூபமாதலா லென்க. ஈண்டு மரமுதலியவற்றிற்றிகும் தாம்வளரவேண்டிச் சிலபொருட்களை உட்கொள்ளும் இயலிருத்தலால் இங்குமெடுத்தோதப்பட்ட உண்பன உண்ணுதன எனப்படும் இரண்டும் ஜங்கமதாவரங்கொன வியாக்கியா னஞ் செய்யப்பட்டதறிக, (1) 'அசன' மென்னும் வடசொற்கு உண்பதும், வியாபித்தலும் பொருளாதலாலென்க.

---

(1) ஸாசனம், அனசனம், இவ்விருசொற்களே மூலத்துள்ளன. அவற்றில் உள்ள அசனச் சொல்லை பெருவழக்குபற்றி ஈண்டு உண்டிப் பொருளதாக்கி உன்பன உண்ணுதனதென மொழிபெயர்த்தார் என்க.

நாலாவது மந்திரம்
முற்றும்.

ஐந்தாம் மந்திரம்

மேல். அவனே உலகத்திலுள்ள காண்பொருள்களனைத்துமாய் விவர்த்தனு யினனோ எனில் அங்ஙனமன்று. விராட்டென்றுபெயரையுடைய பிரமாண்டதேக விசுவருபனைச் சிருஷ்டித்து அவனையே யதிஷ்டித்து அவன் வழியே உலகத்தைத் தன்னுளேற்றினுன் என்று குறிக்கின்றது ஐந்தாம் மந்திரம்.

விராட்டவன் பாலுருக்கொண்டுகித்தனனே
விராட்டவன்றனையதிட்டித்தவன்புருடன்
அவனேபிறந்துவிரிந்தனன்பின்னர்
பூமியைநகரைவியாபித்தனனே.

அவன்பால் = முற்கூறிய விலக்கணம் பெற்ற பரமபுருடனிடம்; விராட்டு = விசேஷமாய் எவனிடம் பொருள்கள் பிரகாசிக்கும் அவன் (வி = விசேஷம். ராட்டு = பிரகாசித்தல்) எவன் விசேடமாய் வஸ்துக்களைப்பிரகாசிப்பிப்பான் அவன் விசேட மாய் பிரகாசிப்பவனென்றுவது பொருள் கொள்ளலாம். அவன் காண்பொருளெவை யும் ஒருங்கமைந்த திருமேனி பெற்றுளானுதலின் அவனைப் பிரமாண்டதேகனென உபசரிப்பது வழக்கம். இனி அவ்விராட்டினந்தர்யாமியே ஜீவனெனக் குறிக்கின்றுர். விராட்டவன்றனை யதிட்டித்தவன் புருடனென்று, விராட்டவன்றனை = பிரமாண்ட தேகனை, திட்டித்தவன் = அந்தரியாமியாய்த் தன் வசப்படுத்தி நடத்துபவன், புருடன் = பரமசிவன் அதனைப்படைத்ததனுள்நிறைந்தான் என்பதாதி வேதவாக்கியங்களால் தம்மிடம் முதலிலாவிர்ப்பவித்த விராட்டைத்தாமே அந்தர்யாமியாய் நின்ற திட்டித்து ஸ்துலரூபபிரமாண்டதேக அபிமானியாய் ஜீவபவத்தைப்பெற்றுனென்பது கருத்து. அது கொண்டே மாதவாசாரியரியற்றியபாடியத்தில் (1) பிரம்ரூபத்தைச் சிருஷ்டித்து அதனுட்சிவரூபமாகப் பிரவேசித்து பிரமாண்ட அபிமானிதேவதையாய்ச் சீவனுகின்றுன் என்றுளது. ஆதல்பற்றியே அவன் முதற்சரீரி அவனே புருடனெனப் படுவான் என்ற சுருதியும் இவ்விராட்டவன்றன்னையே குறித்தெழுந்ததென்று ஊகிக்கற்பாலது. அங்ஙனமே அதர்வணவேதம் உத்தரசாபினியோபநிடதத்தில் 'அப்பரமன் பூதங்கள், இந்திரியங்கள். விராட், தேவர்கள். கோசங்கள் இவைகளைப் படைத்து அவற்றுள் நிறைந்து மயக்கிற்றவன் மயக்குற்றவன்போல் மாயையாலே விரிக்கிறுன்' என்று படிக்கப்படுகிறது. ஈண்டு தேவதைகள், சரீராபிமானிகள், கோசங்கள் அன்னமய முதலியன உண்ணிரைந்து என்பதில் அந்தர்யாமியாய் என்று கூட்டுக. 'மயக்கிற்றவன் இயல்பில் சுவப்பிரகாசன் மயக்குற்றவன்போல் விவரிக்கி

றுன்' என்றதனுல் அவனிடம்தோன்றுமயக்கமும் அதன் வழிதோன்றும் விவகாரமும் போலிப்பொருள்களாயின.

(1) பிரமரூபத்தை என்றதற்கு சதுர்முகஊ என்று பொருளல்ல, மற்றுமுதலில் பிரமத்துக்குத்தோன்றிய ரூபத்தை என்பதே கருத்து. அல்லது விராட்டென்பவன் சதுர்முகனென்றே ஆசிரியர்கருதினுர்போலும்.

மாயையாலே என்று தோற்றினமையால் 'மாயாமந்திர' முலகமென ஏற்பட்டது. பிறகு 'அவனே பிறந்து' பிறந்தவுடன் (பிறப்பிற்றுனே விரிந்தனன் = பலபொருள்க ளாய்த்தோற்றினன். ரூபந்தோறும் வேறுயினன் = உள்ளும் புறம்புமென்ற சுருதியில் பலரூபனுயினுனென்பது கருத்து. இவன் பிறந்து சிறிதுகாலங் கழித்து பலரூபனுயி னுனிஊ, பிரபஞ்சமஊத்தும் இயல்பில் அவனுக்கமைந்த திருமேனியாதலாலென்க. ஊன், புலால், முதலிய பலபொருள்கள் மயமான இச்சடலத்துக்கு ஒரு ஜீவன் அபிமானியாதல்போல், நானுப்பொருண்மயமாயமைந்த இப்பிரமாண்டத்துக்கு ஒருவனே யபிமானியாதலால், சரீரத்தை ஒன்றறெனக் குறிப்பிட்டது போல் இப்பிர மாண்டதேகஊயும் ஒருவனெனக் குறித்தது. 'பின்னர் பூமியை நகரை வியாபித்த னனே' 'பூமியை, நகரை' என்றது ஏகதேசமாய் எலாப்பொருள்கஊயும் குறிக்குஞ் சொல்லென்க. ஈண்டு பின்னர் என்றது காலத்தைக்கு குறிக்காது வாக்கியாலங்கர ரமாய் நின்றது. அங்ஙனமே மநு: - 'இஃது இருள் நிறைந்தறியப்படா நிஊமையில் (1) அக்கரமனறி இருந்தது' என்று தொடங்கி 'மகாபூதாதிகளாய்த் தெரிந்தோர் வீரியம் பெற்று இவ்வுலகந் தம்முட்டுலங்க; அறுகுணனிறைந்தவோர் சுயம்பு, அவ்விருஊ யதிட்டித்த ஏகநாயகனிடம் பிறந்தான்' என்று இருள்மாத்திரையாய் நின்ற ஆதி சிருஷ்டியில் (ஈண்டு இருளென்றது மூலாவித்தை) அங்விருஊயதிட்டித்த பரமேசுர னிடஞ் சகலபூதங்களுக்குங காரணனுன பிரமாண்டதேகன் பிறந்தானெனச் சொல்லு கிறுர்.

(2) அக்கரமின்றி = நாமமின்றி, இதுரூபத்துக்கும் உபலட்சணமாகவே நாமரூப ங்கள ற்று என்பதுபொருள்.

இங்கு பிரமாண்டதேக னெனக்குறித்தது, 'எவன் சந்தங்களுக்கு நாயகன், விசுவரூபன்' என்பதாதி பலவேத வாக்கியங்ளில் விரித்தோதிய விண்டுவேயென க்கொள்க. 'விசுவன். நாராயணன். பரன்' என்று வேதம் கூறுதலானும், அவனது' முகமுதலிய அவயவங்களினின்றே பிராமணுதி நான்கு வருணங்களும் பிறந்ததாக இவ்வுபநிடதம் வருணித்தஊ யனுசரித்து விஷ்ணுபுராணுதிகள் வருணித்தலாலும், விராட்டென்பவன் விண்டு என்பதே ஒவ்வும். கீதையில் பத்மநாபனுக்கேபரமே சுவரதிவ்விய யோகவைபவத்தால் இயற்கையில் அமைந்த விசுவரூபம் உண்டென் பது நாட்டப்பட்டது. அற்றேல் 'ததீதி, அநுமான், முதலிய மற்றவரிடத்தும் அவ்விச் சுவரூபமிருத்தலானும் விராட்டென்னும்சொல் பிரம்மதேவன் வியூகங்களுக்குள் ஒருவரிடத்தும், ஹிரண்யகர்ப்பனிடத்தும் பெரும்பான்மையிற் வழங்குதலானும், நான்கு வருணங்கள் முகமுதலிய அவயவங்களில் தோன்றிய கதையைச் சிவனிடத்

தும் பிரமனிடத்தும் புராணங்கள் வருணித்து நிற்றலானும்' இங்கு ஒருதஉலச் சார்பாய் விண்டுவேவிராட்டென குறித்தது எங்ஙன்மெனிற் கூறுதும்: -

ததீசி, அநுமான் முதலியோரிடம் தவவிசேடத்தால் கிடைத்தவிச்சுவரூபம் விராட்டிடமமைந்த விச்சுவரூபத்தைப்போன்று நேரில் பரமேசுவர திவ்ய ரூபமாகக் குறித்திடஒவ்வாது. மற்று பிர்மதேவனது வியூகமூர்த்தி அவனிடத்தே தோன்றிய வனுதலின் அவஉன யீண்டு விராட்டெனவும் கூடாது. பிரமதேவன் சகல பிர்மாண்ட ங்கஉளயும் தன்சரீரமாய்ப் பெற்றுள்ளானென்பது எந்தபிரமாணத்திலும் கிடைத்த தில்உல. மேல்மனுவசனத்தில் இருணுயகனிடமதோன்றிய புருடன் உலகத்தைச்சிரு ட்டிக்க விரும்பி முதலி சிருட்டித்த சுவர்ண அண்டத்தில் பிர்மன் பிறந்ததாக வேற்படுதலால் ஈண்டுஈசனிடத்துத்தோன்றியவனவனுகான். பிராம்மணுதிகஉள முகமுதலிய அவயங்களினின்று சிருட்டித்தா னென்று ஓதுவதும், பரமேசுவரனிடம் பெற்றதிருவருளால் தமக்கமைந்த அவாந்திரவாதிபத்தியத்கைப்பற்றிய கதையே யென்று கண்டொதுக்கவேண்டும். ஆயின் யாம்முற்கூறியதே நியாயமெனக்கொள்க. பின்னர் வராகரூபங்கொண்டு நீரில்முழுகினுன். 'அச்சிவாத்மாவும் சத்திரூபனுமான பிரஜாபதி நீண்டகாலத்துத் தன்னிச்சையால் நீரிற்சயனித்து நாராயணனென்னும் பேரைப்பெற்றான்' 'நீரில்முதலிற் சயனித்த வதனுலே யவஉன நாராயணனென்பார்' 'பிரம்மாநாராயணனுய் நீரில் துயின்ருன்' என்பதாதி சுருதி, ஸ்மிருதி, புராணங்களி பூமியை யெடுக்கவேண்டியவராக அவதாரமும், நாராயண்னென்னும் பதத்தின் பொருளாய் நிற்றலும், அங்ஙனம் அண்டம், பத்மமுதலிய பொருள்களிடத்துத் தோன்றி மறைதலும் கற்பேதங்களால் பிரமதேவனிடத்துச் சம்மந்திப்பது போல் இங்குள்ள விராட்டென்னும் சொல்உல ஒருவாறு (1) சேர்த்திட்டாலும் சேர்க்கலாம். ஆனுல் பரமேசுரனிடத்தில் முதலிற் தோன்றிய விராட்பிரமனுயின் விஷ்ணுவாதி சமஸ்தப் பிரபஞ்சங்களும் அவனிடத்தில் பிறந்ததாகக் கூறநேரிடும்.

(1) சேர்த்திட்டாலும் = அனேகவிடங்களில் பிறந்ததுபோல்ஈண்டு விராட்ரூபங் கொண்டு சிவன்பாலுதித்த தெனப்பொருள் கொண்டாலும்.

நிற்க; 'ஒருவனன்ரே நாராயணனுயினுன்' என்றசுருதிக்குப்பரமேசுரனிடம் நாராயணன் தோன்றினு னென்று பொருள் கூறித்துணிந்த சிவதத்வ விவேகநூலார், நாராயணனே இவ்விராட்டென்பதில் தன்கருத்தைவெளியிடுகின்ருர்களாதலின் இவ்வுபநிடதம் நாராயணஉனயேவிராட்டெனக் கூறி, அவஉனயே அவாந்தரசிருஷ்டா வாகவும்குறித்து, அவஉனயேவிசுவரூபம் முதலியவைபவம் பெற்றவனென வர்ணிக் கவெழுந்ததெனக் கொள்ளின் நாராயணபூஜையில் இச்சூத்தத்தை விநியோகித்த தும்வைஷ்ணவசாந்தியில்விநியோகித்ததும் ஒருவாறு ஒவ்வும். அங்ஙனமே காரண குணம் காரியத்திடமமையுமாதலின், 'ஆயிரஞ்சென்னியன்' என்பதாதி இலக்கணங் கள் நாராயணனிடத்துள்ளன லெனமகோபநிடதமுசலிய சிலவுபநிடதங்கள் கூறிய தும் குற்றமுருது. அங்ஙனம் 'ஈசானனென்னும், (1) சுருதி வலிமையாலிதற்குக்கிடை த்தசிவபரத்வமும், சிலபுராணங்களின் உப்பிருங்கண வழியாலமைந்த விஷ்ணு பரத்வமும் விரோதியாது. பரமேசுவரனிடத்து பிராமணுதி நான்கு வர்ணங்கள் தோன் றியதாக வர்ணிக்கப்படுவதும் காரியத்தன்மையைக் காரணத்திலேற்றித் துதித்ததா

கக்கொண்டால் விரோதப்பட விடமில்ஸ்ல. அற்றேல் விராட்டென்னும் சொல் ருத்திரஸ்னயே கூறும். அவனே நீரொப்பியமுக்கிய சுருதியாகிய ஈசான சொற்குப் பொருளாயுள்ளானென. 'ஆதலாலீசானன், மஹாதேவன், மஹாதேவனென்றுதேற்றி அவ்வீசானன் நாரணனிடத்துப் பிறந்தான்' என மகோபநிடதங்கூறுதலானும், 'பிறக்காதவன் நீயன்றே; பயமுள்ளவன் உனதடிபணிவான், ஏருத்திர! உன்தென் முகத்தாலன்ஸ்ன யென்றுங்கா' என்பதாதி சுருதிகளில் ருத்திரன் பிறவாதவனென் றுகுறித்தது கருப்பையில் வாசங்கொள்ள வில்ஸ்லயென்றப் பொருளுடையதாக கூறவேண்டுமே யன்றிவேறு வழிகொண்டால், பிரமன், முகத்திற்ருேன்றி அவதார மும், துர்வாசமுனியவதாரமும் ஒவ்வாமலொழியுமாதலாலும், அதேமகோபநிடதத் தில் 'ஆயிரம் சென்னியன் ஆதிக்குறிகள் நாராயணனிடத்துக் கூறப்பட்டமையானும் அவனிடம் பிறந்த ருத்திரனே விராட்டெனக்கோடலொவ்வாதோ' வெனின் அற்றன்று. நாராயணனிடத்தில் ஆவிர்ப்பவித்த ருத்திரனிடத்திலும் 'ஸ்ரீயைத்தரித்து' என்பதாதி வசனங்களால் அங்கங்கள் அவயவங்க ளெனனப்படும் மகாகுணங்கள். நாராயணன் சங்கற்பஞ் சிறிதுமின்றியமைந்ததாகக்குறிப்பிடப் பட்டமையால், மகோப நிடதங்கூறிய சிவாவதாரம் இச்சாவதாரமே சிலாலோகாதிகளில் அவதரிப்பது போல வாதலால் மேலும் அதேயுபநிடதத்தில் சிவநாமதேயமாகத் துணிந்து ஒதப்பெற்ற ஈசானென்னும் சொல்லுக்கு அடைசொற்களாயமைந்த 'ஆயிரம் சென்னியன், ஆதிச்சொற்கஸ்ள அப்பதப்பொருளிடம் சேர்ப்பதே உசிதமன்றி அவனுக்கோர் கற்பஸ்ன யப்பனைக்கற்பித்து அவனிடஞ்சேர்த்தல் கூடாது. மேல் பிறந்தான் எனக்குறிக்கப் பட்டவன் பிறவாதவனே என்று வேதம் விதந்தோதியபிறப்பிலிப்பேரருள் வள்ளல் ஆதானென்பது யாவருமறிவார். இனிப்பிரமன் நுதலிற் பிறந்ததும் அப்பரமனுகான். உலகபஞ்சகிருத்திய நிகழ்வதற்கெனத்தமோகுணஉபாதிபூண்ட ருத்திரமூர்த்தியே யென்பது சித்தாந்தவுண்மை. ஆயின்நாராயணனே விராட்டென்பதில் ஏதும் விரோத மில்ஸ்ல. அநேகப்பிரமாணங்களும் ஒத்துவருகின்றன. பிரமதேவன் விராட்டென்பதில் தக்கபிரமாணங்கள் அகப்படுவதரிது. ருத்திரனே விராட்டென்பதில் ஓர் சிறிதும் பிரமாணமில்ஸ்ல. எதுவுமில்ஸ்ல. சில பிரமாண விரோதமுண்டு என்பதாதி விரிஞ்சி விடுத்தாம். இந்த மந்திரத்தின் முடிந்தகருத்து 'அவன்டால்' முற்கூரிய இலக்கணம் பெற்ற ஈசானன் பால் 'விராட்டு' பிரமாண்டத்தைத் தேகமாய்ப் பெற்ற ஹரி அல்லது பிரமன், அல்லது சங்காரருத்திரன் 'உருக்கொண்டுதித்தனன் 'பிறந்தான் 'விராட்டவன் றன்ஸ்ன அதிட்டித்தவன்' அந்தரியாமியாயுட்சென்று நிறைந்தவன் புருடன. 'அவனே பிறந்து' அவன் பிறக்கும்பொழுதே 'இரண்ணியகர்ப்பன் பிறக்கக்கண்டான்' என்னும் சுருதியிருத்தலால் ஈண்டு பிறந்தென இறந்தகாலத்தைக் குறிக்கும் எச்சவிகுதி நிகழ்காலத்து வைதிகமாதலால் உபயோகிக்கப் பட்டது. 'விரிந்தனன்' காண்பொருள ஸ்னத்துமாயினன். பின்னர் பூமியை பூதாதிகஸ்ள, நகரை சரீரங்கஸ்ள வியாபித்தன னென்பது.

(1) சுருதி = இவ்வுபநிடதத்துவக்கத்தில்யாம் குறித்தபொருளறியறிகுறிகளின் முதன் மைபெற்று, இடுகுறியாற்றலால் பொருஸ்ளத்துணிந்தோதும் சொல்லே.

ஐந்தாம் மந்திரம்

முற்றிற்று

ஆறும் மத்தியாயம்

மேல் பிரமாண்டதேகன் சகல சரீரசமட்டிரூபனுகையால் அவனிடத்துத் தோன்றிய தேவர்களென்னும் இந்திரியாபிமான தேவதைகளின் சிருஷ்டிக்கிரமத்தை மானசயாகமாகவுருவகப்படுத்தி, உலகச்சிருஷ்டியை முறையே பத்துமந்திரங்களால் கூறுகின்ருர். அவற்றுள் முதல் மந்திரம்.

எந்தப்புருடனென்னுமவிசால்
இமையோர் வேள்வியியற்றினரதற்கு
வசந்தனுச்சியமாயினன் க்ரீஷ்மன்
இத்துமக்சாத்ருதுஹ விசாகும்மே

எந்தகாலத்தென்று வருவித்து இதனுட்கூட்டிடலால் எந்தக்காலத்துத்தேவர் கள் விராட்டினிடந்தோனறினரோ அந்தக்காலம் என்பது கருத்து. புருடனென்னும் = விராட்டெனக்குறித்த பிரமாண்டதேகன் என்கிற அவிசால், வேறு அவிசிசுமையால் அதுவே அவிசாகக்கற்பித்தார்களென்பது கருத்து. இமையோர் ஈண்டு இமையோர் என்றது இந்திரனுதியோரையன்று; மற்று ஆதிகாலந்தொடங்கி அமலனடி நிழல் நீங்கபெறுதநித்தியகணநாதர்களையே, வேள்வியை = மானசவேள்வியை காயிகமாய் செய்தற்குத் தகுந்தசாதனமின்மையானும் தேவர்களுக்கு வேள்வி யியல்பிலமைந்த மையானும் என்க. இயற்றினர் = கற்பித்தனர். எங்ஙனமெனில் அதற்கு = அந்த வேள்விக்கு, சந்தன் = இளவேனிற் காலம் ஆச்சியமாபினன; கிரீஷ்மன் = முதுவேனில் இத்துமம் சமித்துக்களிருபதை அடுத்த மந்திரங்கூறும். சரத்ருது = கூதிற்பருவம், அவிசு = அவிசாயதெனக்கூட்டுக. ஈண்டு இவ்வேள்விக்குப் புருடனே அவிசென்று கூறப்பட்டது. பின் சரத்ருது அவிசாதல் எங்ஙனமெனில், அடுத்தமந்திரத் தில் புருடனைப்பசுவாயாத்தனரிமையோர் என்று புருடன் பசுவாகக் கற்பிக்கப்பட்ட மையானும் ஆச்சியம் வசந்தனுயினமையானும் சரத்ருது (1) புரோடாச முதலிய ஹவிசாயதென்க. மூன்று ருதுக்களை யெடுத்தது அவற்றின் சிறப்பைநோக்கி; வசந்தம் சிசிரருதுவுக்கும் (பின்பனிப்பருவம்) கிரீஷ்மம் கார்ப்பருவத்துக்கும், சரத் முன்பனிப்பருவதத்துக்கும் குறிப்பாமாதலின் முதலில் யஞ்ஞத்துக்குச்சம்பாதிக்க வேண்டியவை ஆஜ்யம் இத்துமம் சமித்துகள் அவ்வப்புரோடாசங்களுக்கு வேண்டிய தானியமிவையே எனக்குறிக்கப்பட்டது.

(1) புரோடாசம் = இதுதான்யத்தின் விகாரமாயஹவிஸ்.

ஆறும் மந்திரம்
முற்றும்

ஏழாவது மந்திரம்

முன்மந்திரத்திற் குறித்த இத்துமத்திற்கு எண்வகுத்துபசு இஃதென இவ்வேழா மந்திரம் குறிக்கின்றது.

ஏழுபரிதிகள் இவனுக்காயின
மூவேழுசமித்துக்கண்முறையிற்கமைந்தன
புருடனைப் பசுவாயாத்தனரிமையோர்
யாகந்தன்னையியற்றினரன்றே.

இவனுக்கு = மேற்கண்ட எஞ்ஞத்துக்கு என்பதுபொருள். 'ஏழுபரிதிகள் ஆயின. மூவேழுசமித்துகள் = இருபத்தொருசமித்துக்கள் சமைந்தன = யாகந்தன்னை இயற்றினரன்றே அவர்கள்யாகத்தைச் செய்யும் காலத்தே 'புருடனைப் பசுவாயாத் தனரிமையோர்' விராட்டென்னும் புருடனை முற்கூறிய இமையோர் மானசவேள்வி யிற்பசுவாக்கினர். பசுவெனப்பாவித்தன ரென்பது கருத்து. ஈண்டு 'ஏழுபருதிகளென் றது காயத்திரி முதலிய ஏழுசந்தங்களெனவும் அவைஆகலனீய, ஔத்திரமேதிகம் என்னும் இரண்டு அக்கினிகளில் போடும்மும்மூன்று பருதிகள் ஆக. 6 - போக 7 - வது சூரியனெனவும்' சாயணீயபாஷ்யம் வேதத்திலும் முன்புறம் பருதிபோட வேண்டியதில்லை; ஆதித்தனே யெழுந்து அரக்கர்களை யொழித்து அப்புறம் பருதியாவானென்று விளங்குகின்றது. அங்ஙனமே மாதங்கள் பன்னிரண்டு, ருதுக்கள் ஐந்து, லோகங்கள் மூன்று, (2) ஆதித்தன் இருபத்தொன்றுவானென்று வேதத்தில் மற்றோரிடம் புகழ்ந்தோதப்பட்ட இருபத்தொரு பதார்த்தங்களோீண்டு இருபத்தொரு சமித்துக்களென்று சொல்லப்பட்டன. யாகம் செய்த தேவர்களோ முற்கூறிய விராட் டினது பிராணன்களும் புலன்களுமெனவும் இப்பொருள் சுருக்கி முன்மந்திரத்தால் உரைக்கப்பட்ட தெனவும் ஆன்றோர் உரை செய்தனர்.

---

(2) ஆதித்தன 21, வது, என்றது சமித்துக்களைப் பொதுவாய்க் கூறியது. அதில் பருத்தியும் அடங்குமாதலால் அவைகளைச்சிறப்பாய் வேறெடுத்து ஓதினும் அவற்றுள் சிறந்த ஆதித்தனை இங்கு எடுத்து பருதி சமிகதிலடங்குமென்பதைக் காட்டுவதற்காகவேயாதலின் இஃது கூறியது கூற்றல்ல.

ஏழாவது மந்திரம்
முற்றும்.

எட்டாவது மந்திரம்

இனி எஞ்ஞக்கிரியையின் முறையைச் சொல்லுகின்றார்.

முன்னுறத்தோன்றியபுருடனை எஞ்ஞனை
அந்தநல்வேள்வியிற்புரோக்ஷித்தனரே
அவனலிமையோரியற்றினர்வேள்வி
சாத்தியரிருடியர்தாமுமியற்றினர்.

(இதன் பொருள்) முன்னுறத்தோன்றிய புருடஊன = விராட்டை, எஞ்ஞஊன = வித்ணுவை, 'எஞ்ஞனுமன்றே விஷ்ணு என்னும் சுருதியாலென்க = (யஞ்ஞசாதன மான பசுவாகப்பாவித்து) அந்தநல்வேள்வியில் = முற்குறித்தயாகத்தில், புரோக்ஷித் தனர் = அவிசுக்குள்ள சம்ஸ்காரத்தைச் செய்தனர்- அவனல் = முற்கூறியபுருடனல், சாத்தியர் = சிருட்டியைச் சாதனஞ்செய்ய் யோக்கியருன பிரஜாபதிகளென்று கூறினர் சாயனசாரியர்; இருடியர் = வேறுருஷிகள் அக்காலத்தின்மையால் வேதமந்திரங்க ளில் கண்டவர்கள் முற்கூறிய இமையோர்வேள்வியியற்றினரென்று கூட்டிமுடிக்க.

எட்டாவது மந்திரம்
முற்றும்

ஒன்பதாம் மந்திரம்.

இதனல் யஞ்ஞபலத்தைக்கூறுகின்றர்: -

அந்தச்சர்வஹூத்தாகியவேள்வியில்
பிரஷத்தியாச்சியமபெரிதுசமைத்தனர்
காட்டகத்துள்ளனநாட்டகத்துள்ளன
அவைவாயவ்வியபசுக்களாக்கினரே.

(இதன் பொருள்) (1) சர்வஹூத்தாகிய = எல்லாப்பொருளுமாய் நின்றவிராட் இந்தகேள்வியில் ஹவிஸாகி நிற்றலால் இது சர்வஹூத்தெனலாயிற்று அல்லது சர்வதேவர்களாலுக்ஹோமம் செய்யப்படும் பொருஊயும் சர்வஹூத்தெனலாம். இங்கு வேள்வியென்னுஞ் சொற்கு யஞ்ஞமென்னுமோர்கர்மம் பொருளாவதுபோல் நாராயணனும் பொருளாவானென்பது முன்மந்திரத்தில் காட்டினம். ஆக இவ்வேள் வியில் என்பதால் அந்தக்கன்மத்தில் என்றுவது நாராயணனிடுலன்றுவது பொருள் கொள்ளவேண்டும். பிரஷத்தாஜ்யம் = தயிருடன் கலந்தநெய் தயிருடன் கலந்த நெய்க்கு பிரஷத்தாஜ்யமென்பது சிரௌதவழக்கு. இதனால்போகத்துக்கேற்ற எல்லாப் பொருள்களும் குறிக்கப்பட்டனவாதலின் அவைகளின் சிருஷ்டி முதலிற் கூறப்பட் டது. வாயவ்யபசுக்கள் = வாயுவைத்தேவதையாகப்பெற்ற பசுக்கள்; 'வாயுக்களாவீ ரென்றுனவாயு அந்திரிக்ஷத்துக்கதிபதி, நல்லகாற்று நிறைந்த விடத்திற்றுனே பசுக்கள் ஜீவிக்கும்; ஆதலின் பசுக்கஊ வாயுவினிடத்து ஒப்புவிக்கவேண்டும்' என்று யஜுர்வேதம் கூறிநிற்றலால் பசுக்களே வாயவ்யங்களென்றது காட்டகத்துள்ளன = மான் முதலியன. நாட்டகத்துள்ளன = ஆ முதலியன. ஈண்டு பசுக்களென்றது நாற்கால் ஐந்துக்கஊ; ஆக்கினர் = சிருஷ்டித்தனர்.

---

(1) சர்வஹூது. சர்வ = எல்லாம் ஹூது = ஹோமம்செய்தல். இவ்விரு பொருளுங் கூடிய பொருளெல்லாம் இதன் பொருளாகலாம்

ஒன்பதாம் மந்திரம்
முற்றும்

பத்தாம் மந்திரம்

முற்கூறிய சிருஷ்டியை விரிக்கின்ருர்.

சர்வஹுத்தாயயஞ்ஞன்றன்பால்
ரிக்குகள்சாமம்சந்தம்யஜுஸு
வாயினவெல்லாம்தோன்றினவடைவே.

(**இதன் பொருள்**) 'சர்வஹுத்தாபயஞ் என்றன்பால்' என்பதற்கு அந்தச் சர்வஹுத்தாகிய வேள்வியிலென்பதுபோல் பொருள் கொள்க. ரிக்குகள் சாமங்கள் இவை அடைவேதோன்றின. சந்தங்கள் காயத்திரிமுதலியன.

பதினேராம் மங்கிரம்

பசுக்களக்கினரென்பதை விரித்துரைக்கின்ருர்.

அச்சுவமிருபாற்பற்களுள்ளனவும்
ஆக்களயங்களவிகளுமெல்லாம்
அன்னவன்பாலேதோன்றின முறைரே.

(**இதன் பொருள்**) அன்னவன்பாலே அச்சுவர்கள் தோன்றின. இருபாற்பற்க ளுள்ளன = மேலும் கீழும்பற்களுள்ள சிலமிருகங்கள். 'ஆக்கள், அவயங்கள், அவிகள் அயங்கள் விகளென்பன் ஜாதிவேற்றுமையற்றி வேறுகூறினர்.

பன்னிரண்டாம் மந்திரம்

மேற்கண்டபடி நோக்கிய சிருஷ்டியைக்குறித்துப்போக்தாவின் சிருஷ்டியை விஞ விடையாகக்காட்டுகின்ருர்.

எவ்வகையாகப்புருடஊயாக்கினர்
எவ்வகையாகவேற்றுமைசெய்தனர்
இவனதுமுகம்கைதுடைகள்கால்கள்
கூறப்படுவனயாவைகொலென்னில்

(இதன் பொருள்) இதுவினு. புருடஊன ஆக்கினேர் எவ்வகையாக்கினர்? எவ்வ கையாக வேற்றுமை செய்தனரென்று வினவியதன்கருத்து. சிருஷ்டியில் ஒரே விதமான மனுஷனு? அல்லது பலவகைத் தாகவோவென ஐயம் நிகழ்ந்தெழுந்த தெனக. 'இவனது முகம் கை துடைகள் கால்கள் யாவை' என்று கூறப்படுவன. கூறப் படுவனவென்பதை எல்லாவற்றிலும் கூட்டிக்கொள்க.

பதின்மூன்றும் மந்திரம்.

விடை.

பிராமணனிவற்குமுகமாயினனே
அரசன்கைகளாக்கப்பட்டனன்
அவனதுதுடைகள்வைசியனென்ப
சூத்திரன் பாதத்திருந்துதித்தனனே.

(இதன் பொருள்) 'இவர்க்குமுகம்' முகத்தினினறு என்பதுபொருள், வேதத்தில் எல்லா வேற்றுமைகளுக்கும் பிரதிநிதியாய் எழுவாய்வேற்றுமையுமுபயோகப்படுத் தலாமென்பது வடமொழியியலாதலாலென்க. பிராமணன் ஆயினன் = பிராமணன்உதித்தனன். அவ்விராட்புருடனுக்கு முகமாகத்தேவமானஸ யாகத்திற் கற்பிக்கப்பட்டான் என்பது பொருள். மற்றதுதானே விளங்கும். யஜுர்வேதம் ஏழாங் காண்டத்தில் 'அவன்முகத்தினின்று பிரணவத்தைச் சிருஷ்டித்தான்' என்று தொடங்கி ‘ஆதலிற்குத்திரன் வேள்விக்கனதிகாரி' யென்பது வரையெழுந்து நீண்டதோர் பகுதியால் மேற்கண்ட சிருஷ்டிக்கிரமத்தை விரித்தலால் இங்கு கண்டவினுவிடை யிரண்டும் அதே பொருளில் முடிக்கவேண்டுமென்பது ஆசிரியர் சாயனர்கூற்று,

---

பதினுன்கு பதிஊனந்தாம் மந்திரம்.

எஞ்சிய சிருஷ்டி கூறுகின்றுர்.

சந்திரன் மனத்தினின்றுபிறந்தனன்
சூரியன்கண்களினின்றுதித்தனனே
முகத்தினின்றிந்திரனங்கியும்போந்தனர்
வாயுப்பிராணனில்வந்துதித்தனனே.
உந்தியிலந்தரிட்சமாகியதே
சென்னியினின்றுகாயமுண்டாயது
கால்களிற்பூமிகாதினிற்றிக்குகள்
இங்ஙனமுலகைக்கற்பித்தனரே.

இது வெளி.

'சென்னியினின்றுகாயமுண்டாய' தென்பது பரமான்மா வியோம் கேசனுகலா லென்க. 'இங்ஙனமுலகைக் கற்பித்தனரே' என்றதால் உலகெலாமொழிந்து பரிபூர்ணு கண்ட ஏகரச சச்சிதானந்த பரசிவத்தினிடம் பிரமாண்ட சரீரியாகிய விராட்டென்னும் விராட்டைக் கற்பித்து, அவன்வழியிலிவ்வுலகை ஈண்டு சேசனரென்று வழங்கப்பட்ட தேவர்கள் தம்முட்டாமே கற்பித்தனரென்றதனுல் இக்காண் பொருளனைத்தும் நிஷ் களப்பொருளிடத்துக் கற்பிதமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். ஆதலாற்றுன் இலிங்கபுராணத்தில் 'அப்பரி பூர்ண பரமேஷ்டிக்குச் சென்னி ஆகாய மாம். உந்தி அக்கரிக்ஷமாம். சந்திரன், சூரியன், அக்கினி இவர்கள் கண்களம். திக்கு கள் செவிகளாம். அப்பரமான்மாவின் முகத்தினின்றே உலகத்தைப்படைக்கும் பிரமனும் பிராமணரும் பிறந்தார்கள். அம்மகானமாவின் தோள்களினின்றே இந்திரன், விஷ்ணு, க்ஷத்திரியர் இவர்களும் பிறந்தார்கள். வைசியர்கள், சூத்திரர்கள் இவர்கள் முறையே துடையினின்றும், பாதத்தினின்றும் பிறந்தார்கள்' என்பனவாதி பலவசனங்களுள. அற்றேல் 'முகத்தினின்றிந்திரனங்கியும் போந்தனர்' என்றது வழுவதமெனின், இங்கு இந்திரனென்றதை (1) 'மகேந்திரன்' என்று கொண்டு முரணு மாறின்மை கண்டடங்குக.

(1) மகேந்திரன் = இவன்சோமயாகம செய்த ஆகிதாக்கினிகளால் இஷ்டி காலங் களில் தேவதைகளாக வெடுத்து பூஜிக்கப்படுகிறவன். இந்திரனென்பவன கேவல ஆசிதாக்கினியால் அவ்விஷ்டியின தேவதையாகக்கொண்டாடப்படுகிறவன். ஆகவே இவ்விருதேவதைகளும் வெவ்வேறென மீமாஞ்சகர் துணிந்தனர்.

பதினுறும் மந்திரம்

'இப்பொருளை வேதமொன்றைக் கொண்டே யறியவேண்டு மெனவும் இருள் நிறைந்த இதையத்தார் காணுரெனவும், பேர் அறிவுடையோரே அதனுண்மையை யறிவா' ரெனவும் அறிவுறுத்துகிறுர்.

எவ்வுருவத்தையுமாய்ந்துளதீரன்
காமங்களையேகழித்தெதைப்பணிவான்
அந்தப்புருடனைமகானையாதித்த
வண்ணனையிருட்கப்பால்யானறிவேன்.

(இதன் பொருள்) அந்தப்புருடனை = முற்கூறிய இயல்புள்ள சர்வபரிபூரண முழுமுதற் பொருளைக் காண்பொருளனைத்தையும் படைத்தவனுகிய மாண்டகேகனு க்கும் பிதாவானவனை மஹானை = மஹான் என்னும் சொல்லுக்கு வேதப்பெருவழக் கில் அமைந்த பொருளை பரமேசுரன் மகானென்னும் சொல்லுக்குப் பொருளென்ப தில்' அவனெதனால் மகாதேனெப்படுவான்' என்று தொடங்கி, அவனதனுல் 'மகாதேவனெனப்படுவான்' என்பதீறுக எழுந்த அதர்வசிரோபநிடமும் 'ஆதலாலீ சானன்மகாதேவன் மகாதேவன்' என்று எழுந்த மகோபநிடதமும் (1) மற்றேருப நிடதசத்தில் 'பிரமதேவன் திருமுகமண்டலத் தவதரித்த முக்கண் முதல்வனுக்கு

அப்பிரமதேவனிட்ட அட்டநாமங்களில் மஹானென்னும் பெயரை யிறுதியில் சித்தாந்தமாக வோதினமையும், அங்ஙனமே போதாயனமாமுனிவர், நித்திய சிவபூசை, நித்தியபிரமயக்கும் முதலியபற்பல விடங்களில் பரமேசுவரனுக் கிடுகுறிகளாயமைந்த 'பவசர்வருத்தி' ராதி சப்தங்களோடு கலந்து விநியோகித் திருத்தலும், ஸ்ரீசத்தியாஷாட முனிவர் குலகவஹோமத்தில் மஹானென்னும் சொல்ஐலவிநியோகித்ததும் ஈசானபலி, மஹன்னியாஸ முதலிய பலசற்கருமங்க ளில் மஹானென்னும் சொல் அவனிடத்து இக்குறியாக விநியோகிக்கப்படுவதும் பிரமாணமெனக்கொள்க. அற்றேல் மகாதேவனென்னும் சொல் அநேகநிகண்டுகளில் கண்ணுதலார்க்குப்பெயராயமைந்தமையின் மகானென்னும்செல்தேவனென்னும் சொல்லோடு கூடிச் சிவபிராஜனக் குறிக்குமேயன்றி மகானென்றதனிச்சொல்லவ ஜனக்குறிக்காதுஎனில்' அற்றன்று. மேற்காட்டியபலபிரமாணங்களால் அம்மஹான் என்னும் சொல் தேவனென்னும் சொல்லோடு கூடியும் உமாபதியை புணர்த்து வதாமேற்படுகின்றது. தேவனென்னும் சொல்லுடன் கூடிய மகானென்னும் சொல் லே யவஜனக்குறிப்பதன்றித் தனித்து நின்றவஜனக் குறிக்காதென்பதற்கு யாதும் பிரமாணமில்ஐல. உலகத்தில் 'சேன' என்னும் சொல்லுடன் கலந்த 'பீம' என்னும் சொல் இரண்டாம் பாண்டவஜனக் குறிக்குமாயின் பீமனென்னும் சொல்லவஜனக் குறிக்காதோ? பூர்வபட்சி, நும்மதத்தில் புருடனென்னும் சொல் கம்முன்மகா னென்னும் சொல்லைச் சேர்த்து மகாபுருடனென்றமைந்து உமது கண்ணஜனக் குறித்தலால் தனித்தபுருட னென்றசொல்லவஜனயே உணர்த்துமென்று யாது காரணம்பற்றிக்கூறிஞய்? பிரதிவாகி! சுருதிஸ்மிருதி கற்பசூத்திரங்களில் அநாதி ஆரிஷவசனங்கள் அம்புலிசூடிப்பெருமாஜன யம்மகானெனும் 'சொல்லுக்கு இங்கு றிப்பொருளென முழங்க அவனிடத்தழுக்காறுற்று வேதாதிகட்குமேலானஎந்நூலம் கழீஇ நீவிர் பிழைப்பீர்? துராக்கிரகீ! மஹானென்னுந்தனிச் சொல்ஐல சுருதிகள் ஸ்மிருதிகள், கற்பசூத்திரங்கள், புராணங்கள், ஆகமங்கள் முதலிய அநாத ஆரிஷ வசனசதகோடிகள் அஷ்டமூர்த்திக்கமைந்த எட்டுநாமங்களில் சேர்த்திட்டு விநியோகி த்து வருவதை நீவிரறிந்திலீரோ? அங்ஙனமே மஹானென்னும் சொல்ஐலயும் மேற்கண்டபிரமாணங்களும் கோசாதிகளும் அவன் பெயரே யெனத்துணிந்தோதுத ஐலக் கேட்டடங்கினீரிஐல. அந்தோ மகாதேவஞகலாம். அவன்மகாஞதல் கூடாதெ ன்று? வாதித்த நுமது புத்திநுட்பத்தை யாதுரைப்போம் மேற்காட்டிய நியாயங்க ளாலும் பிரமாணங்களாலும் மகான் மகாதேவனென்ற இரண்டு சொற்களுக்கும் அவ்வொருவனே பொருளாயமைவதால் யாம் கூறியதேதும் குறையுறுதென்க.

---

(2) சதபதமென வழங்கப்படும் வேதப்பகுதியில் அஷ்டமூர்த்தி பிராமணத்தில் உள்ளது.

நிற்க இனிப் போதாயனகற்பகாரர் இனி மகாதேவன் மகாபுருடன் இவர்கஐள நாடோ றும் பூஜிக்கும் வழிபுகல்வா மென்று மகாதேவனெனும் பதத்தால் ருத்திரஜனக்குறித் ததுபோல, இரண்டு பக்கத்துமுள்ள மகான் என்னுஞ்சொல்லுக்கு சிவன் அல்லது விஷ்ணு பொருளெனத்துணிந்திடவேண்டிதேவன் புருடனெனனும் சொற்கஐள முறை யே கூட்டித்துணியவேண்டியதின்றியமையாதாதலால் ஈண்டு மகான் என்னும் சொல்லிருப்பினும் அச்சொற்சிவபரமெனத் துணிதற்குரிய கருவிபாய தேவன்

என்னும் சொல்லின்மையால் அது சிவபரமாகாது. மற்று அச்சொல்லை விஷ்ணு வென்னும் பொருளாக்கும் ஆற்றலுடைய புருடனென்னும் சொல்லிருத்தலால் இம்மந்திரம் நாராயணனையே குறிக்கும் எனலும் கூடாது. சிவபரமாய்த் தொடங்கிய (1) தொடக்கத்துக்கு (உபக்கிரமம்) விரோதித்தலாலென்க. மேலும் மேற்காட்டிய தனித்தமகானென்னும் சொல்லுக்கமையுமிடுகுறியாற்றலைத்தொடக்கத்தில் தானே சிமெனச்சாதிக்கப்ட்ட புருடனென்னும் சொல் எவ்வழியுந்தடுக்காதென்க. அன்றியும் மகாபுருடனென்னும் தொகைச்சொல்லே விண்டுவைக்குறிப்பதன்றி ஈண்டுபகுத்தோ கிய புருடனைமகானையென்னும் சொற்கள் கண்ணனைக்குறியாதென்க. இங்கு இருதனிப்பதங்களாய்க் குறிக்கப்படினும் அதேதொகைச்சொல்லில் அமைந்த இருபத ங்களே ஈண்டு மமைந்திருத்தலால் அவ்விண்டுகைக்குறியாவோவெனின், அவ்விடு குறியாற்றலை யெடுத்துக் காட்டும். (2) ஆதுபூர்விமாறுதால் பொருந்தாதென்க மேல் தொக்க வேறுமையும் தொகாதவேற்றுமையும் பொருளை வேறுபடுத்துமே வெனின்; வேறுபடுத்துமென்பதை என்னும் சொற்களை யாராய்ந்தடங்குக தேவர்களுக்குப் பிரியமுள்ளவன் ஈண்டு தொக்கியது ஆறும்வேற்றுமை; அவ்வாறும் வேற்றுமை யைக் கூட்டி எனின் அது மூர்கர்களுக்குப்பெயர்.

---

(1) உக்கிரமம் = தொடக்கம். இது மீமாஞ்சகர்கண்ட ஓர் முக்கிய பிராமணம் அ∴தெங்ஙனமெனில் முதலில் கேட்கபட்டும்சொல் ஒன்று தனக்கு பெருவழக்கில மைந்த உண்மைப் பொருளை கொடுத்தலாலும் சொற்களுக்கு கெவுணப்பொருள் கொள்ள ஏதுவாய் மேற்சொற்றொடர்பு இதனுடன் முரணும் பொருளை அச்சமயம் விளக்காமை யானும் இச்சொல் தன்பொருளில் தான் நிலைபெறுவதற்கு தடையேது மில. இச்சொற் பொருளுக்கு முரண் பொருள்கொடுக்கும் சொல்வேறென்று பின் வருமேல் அ∴து செவியில்படும் காலத்துத்தானே தமக்கு முரணுமாறு எழுந்த உபக்கிரமச் சொற்பொருள் அறியப்பட்டமையின் அ∴து துர்பலம். இதுவிஷயம் வேதோபக்கிரம் ஞாயமெனமீமாஞ்சகர் கூறுவது.

(2) ஆனுபூர்வி = சொல்லமைப்பு.

யூசெஸிஹம் = கிராமத்திற்சிங்கம். இங்குள்ளது ஏழாம் வேற்றுமை இதுவேற்றுமை தொக்கவிடம் கழுதையெனறு குறிக்கும். ஆது ஈண்டு தனித்தெடுத்த (1) மகான் புருடனென்ற விருசொற்கள் கண்ணனைக்குறியாவென்று தெளிக. பின்னர் (2) வேதங்களுக்குள்ள விலக்குவிதிபற்றி ஈண்டு வேற்றுமை தொக்கின் றெனின், அங்ஙணம் துணிதற்கேற்ற நிருத்தம் முதலிய பிரமாணங்க ளகப்பட்டாமையின் அது பொருந்தாதென்க. மேலும் அவ்விதந்துணிதற் கிடையூறுய் (3) முன் பின் சொற்கள் மாறியமைக்கப்பட்டன. இதன் விரிவை (4) மேலே காட்டுவாம். இவ்விடத்து மகான் புருடனென்னு மிருசொற்களும் பரசிவன் நாமதேயங்களாகவே அவற்றுள் ஏதேனு மொன்றைக் காரணவாற்றல் கொண்டு விசேடணமாக்கி மற்றென்றை யிடுகுறி யாகக் கொண்டு விசேடியமாக்க வேண்டும். இருட்கப்பால் = ஈண்டு இருளென்றது அவித்தியாமயப்பிரபஞ்சத்தையே இருளெனவழங்கப்பெற்ற பிரகிருதியில் தோன்றிய இவ்வுலகத்துக்கப்பால் அதாவது இ∴தொழிந்த பிறகு முக்குணங்கடந்த முத்திநிலை யிலென்பது கருத்து. 'ஆதித்தவண்ணனை' ஹிரணியவர்ணன்' என்பதாதிச் சுருதியில் கூறப்பட்ட பொன்னுர்மேனியனை 'உலக சொற்பன் மொழிந்தவிடத்துத் தோன்றும்

பொன்வண்ணமேனியனே புருடனென்றறிக.' என்ற மநுவின் கூற்றுலும் 'புருடன் கிருஷ்ணபிங்களன்' என்ற சுருதியாலும், 'பவளநிறம்போன்ற பாதியும் இந்திர நீலம் போன்றமற்றெருபாதியும்' என்பதாதிய (5) யுக்தவசனங்களாலும் கடவுளது திருமேனி கனகவண்ணமென் றேற்படுதலா லென்க - 'இருட்டு' கரியநிறத்துக்கு, அப்பால் = மற்றேர் பக்கத்தில், ஆதித்தவண்ணனே = கதிரவனிகர்த்த நிறமுடையானே அதாவது செம்பளவண்ணனென்பது கருத்து. 'காலைக்கதிரவனிக' ரெனப்புராணங்க ளோதுதலா லென்க.

---

(1) தனிச்சொற்களுக்கு வேற்றுமைத்தொகையில்லாது ஒரு பொருளை உணர்த்துமாற்றல் வழக்கிலும் இலக்கணத்திலும் இல்லையென்பது கருத்து.

(2) வேதங்களுக்குள்ள விலக்கு = இதனுல் வேதங்களில் எல்லா விதிகளுக்கும் விலக்குண்டென்பது ஏற்பட்டது.

(3) முன்பின் = மஹானை புருடனை யென்று இருக்க வேண்டியது. அங்ஙனமின்றி புருடனை மஹானை யென்று படிக்கப்படுகிறது.

(4) மேலே = உபநிடதத்தின் இறுதியில் மற்றவர் கூறியஏதுக்களை மறுக்குமிடத்தென்பது கருத்து,

(5) அபியுக்தர் = ஜகத்குருசங்கரமுனிவர் சிவபுஜங்கத்தில்

இங்கு நீலலோகிதமெனக்குறிக்கப் பெற்றவித்தியாசபள விரூபாட்சமூர்த்தியேயிரவும்பகலுமிருபாலாகும் என்றிவ்வுடநிடத வித்யாசபளவி ரூபாட்சமூர்த்தியேயிரவும் பகலுமிருபாலாகும் என்றிவ்வுபநிடதவிறுதிப் பொருளாதலாலென்க அல்லது 'இருட்டு' முக்குணங்கட்கும் அப்பால், ஆதித்தவண்ணனே சுத்ததத்துவனே அல்லது இருட்டு சுழுத்தியவத்தைக்கு, 'அப்பால்' அவஸ்தைகடந்தவிடம், 'ஆதித்தவண்ணனே' காயித்திரிப்பொருளாய்க் (க) காரியோபாதி கடந்து கதிரவன் மண்டலத்திலங்கும் இரணிய வண்ணமூர்த்தியை இன்னுமனேகபொருள்கள் பிரமாணங்களுக்கேற்ப வூகிக்காலம். 'யானறிலேன், இதுவேதவாக்கியமாதலால் வேதந்தானறிவேனென அப்பொருளைக் குறிக்கிறைமையின், அநாதிநித்திய ஸ்வயம்புவான வேதத்தானறிவேறெவற்றுனும் அறியப்படமாட்டான் என்பது பெறப்பட்டது. மேலும் இச்சூக்தம் ஸ்ரீமந்நாராயணன் திருமுகமண்டலத்திலுதித்தது ஆதலின். அவன் திருவாக்காயமைந்த இவ்வாக்கியம் யானறிவேனெனத்தமதறிவை விளக்கினமையால் இவ்வாக்கியத்தை முதலிலெடுத் தோதியமுகுந்தனே சிவஞானச் செல்வச் செருக்குப் பெற்றனென வேற்படுகின்றது. ஆதலாற்றுன் (1) விஷ்ணுசூக்தத்தில் 'ஒ விண்டு நீபரமன் பெருமையறிவாய், என்று கூறிய தூஉமென்க, மேலும் இதனால் மந்திரத்தைக் கண்டவர் தமதனுபவத்தைக் கூறுகின்ருர் என்ருர் சாயணுசாரியர். அதுகொண்டே அப்பைய தீட்சிதஸ்வாமிகள் (2) அளவிரின் பெருமையறியவு நின்ருட்கழிவிலாவன்பு செய்திடவும், தளமலரெடுத்துன்னருச்சனை யாற்றிச்சாலநின்றிருவருள் பெறவும், வளமவிபுலியூரம்பலத் தரசேமலர்தலையுலகினுட்சுரும்பருளர்தழாய்ப் படலைமார்புடை யண்ணலொருவனே வல்லனுமன்றே, என்ருர். புராணமும் வேத வியாசன் சாக்ஷாத் நித்தியனான நாராயணனே வேறெவன் பரசிவதத்துவத்தைப் பரிபூரணமாயறிவான் என்றது. மாபாரதமும், தேவர்களுக்குக் தேவனும் எங்குத்தோன்றி யழியாதளவிலாப் பெருமைபெற்ற அம்புய லோசனன் அகிலரூபனு

கிய ஏகநாயகனீசனே யென்றறிந்து அவனையிலிங்கத்தில் பூசிக்கின்றன் என்று வெளிப்படையாய் ஸ்ரீமந்நாராயணனுடைய சிவஞானப் பெருமையை வியந்தோதி யது. இனிவேதமும், அல்லது வேதநாயகனுன விண்டுவுந் தாமோசிவஞானிகள் என வினு 'அங்ஙனமன்று; அந்நனூற்பயின்று அந்நாரணன் திருவடிதொழுது நல்லுபதே சம் பெற்றவரும் அச்சந்ததியோரும் சிவஞானிகளாவார்கள்' எனக்கூறுகின்றுர்.

(1 இங்கு எடுத்தோதிய விஷ்ணுசூக்தம்போல் இருக்குவேதத்திலும் 'விஷ்ணுபரமனை யறிந்தான் பிறந்தவருள் பெரியவன் மூன்றுவதைக்காப்பான்' என்றுளது. இஃது மூன்றுவதென்றது பௌதிகபிராகிருத கைலாசங்களை தவிர்த்த மகாகைலாசத் திருப்பதியைக்குறிக்கும் என்று உரைசெய்சனர் ஆன்றேர்என்க.

